www.tamilarangam.net

# அகதியின் குரல்

VOICE OF REFUGEE



## 1983 கறுப்பு யூலை  1997 யூலை ...?

1983 இல் J.R. தலைமையில் U. N.P. அரசு 53 போராளிகளை ***'வெலிக்கடைச் சிறையில்'*** கண் தோண்டி, கை, கால் வெட்டி படுகொலை செய்தது. கொழும்பிலும், தெற்கிலும் குழைந்தைகள்-வயதானவர், ஆண்–பெண், மத்வேறுபாடு இன்றி தமிழர்கள் உயிருடன் தீ மூட்டப்பட்டனர், பெண்கள் மனித நாகரீகம் வெட்க்கி தலை குனியும் முறையில் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டனர் தமிழர்களது வீடும், வாகனமும், கடைகளும் அடித்து நொறுக்கி தீவைத்து அழிக்கப்பட்டது, கொள்ளையடிக்கப் பட்டது, தோலில் சுமக்க முடிந்தவற்றுடன் உயிர் பிழைத்வர்கள் கணத்த நெஞ்சுடன் அகதிகளாயினர்.

வடக்கு கிழக்கு தமிழர்கள் கொதித்தெழுந்தனர். உண்ணாவிரதம், ஊர்வலம் கடையடைப்பு, இறந்தவர்களுக்கு கண்ணீர் அஞ்சலிகள் நடத்தினர், உலகம் முழுவதும் தமிழர்களுக்காக கண்ணீர்விட்டது. முக்கியமாக



*தாய் தந்தையை பறிகொடுத்த தமிழ் அநாதைக் குழந்தைகள்*

VOICE OF REFUGEE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழ்நாட்டு மக்கள் எல்லாவடிவமான ஆதரவுப் போராட்டங்களும் நடத்தி குமுறினர். இலங்கையின் எல்லா தமிழ்க் கட்சிகள் இயக்கங்கள், ஏன் உலகம் முழுவதிலுமுள்ள தமிழர் அமைப்புகள், சனநாயக இயக்கங்கள் அனைத்தும், **1983 கறுப்பு யூலைப் படுகொலையை கண்டித்தன.** வடக்கு கிழக்கு தமிழர்களின் தமிழீழக் கோரிக்கையை ஆதரித்தன.

1984 யூலை முதல் 1994 யூலை வரை U.N.P. அரசின் **''யுத்தம் என்றால் யுத்தம்''** தமிழ் இன அழிப்பு யுத்தம், 1995ல் இருந்து புதிய ஒரு பிரகடனத்துடன் நடத்தப்படுகிறது. சந்திரிகா தலைமையில் மக்கள் கூட்டணி அரசின் ''சமாதானத்துக்கான யுத்தம்'' யாழ்ப்பாணத்தை ஆக்கிரமித்தது, வன்னியை அழித்துக் கொண்டிருக்கிறது.

97இல் வவுனியாவிலிருந்து 20,000 இராணுவத்தினர் மன்னார் நோக்கி நடத்திய ''எடிபல'' இராணுவ ஆக்கிரமிப்பும், யாழ்ப் பாணத்துக்கும்—வவுனியாவுக்கும் இடையிலான 72KM தள பிரதான சாலையை கைப்பற்றும் ''வெற்றி நிச்சயம்'' இராணுவ ஆக்கிரமிப்பு 100 நாட்களாகியுள்ள நிலையில் 20km வரை மட்டுமே முன்னேறியுள்ளது. (ஜெயசிக்குரு) இராணுவ நடவடிக்கையால் முள்ளிக்குளத்தில் 3000 அகதிகள் கோயில் குளத்தில் 1800, ஒமந்தை நெடுங்கேணியில் 14,000, வவுனியாவில் 14,800 தாண்டிக்குளத்தில் 1000 அகதிகள் 11,788 குடும்பங்கள் மொத்தமாக இடம் பெயர்ந்துள்ளன. 96ல் யாழைவிட்டு வெளியேறிய 4 இலட்சம் அகதிகளில் 54000 பேர் மீண்டும் யாழ் சென்றுள்ளனர். 5600 அகதிகள் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியிலிருந்து வவுனியா வந்துள்ளனர். மன்னாரில் 4000, பேசாலையில் உள்ள UNHCR முகாமில் 1200 அகதிகள் யாழ் செல்ல காத்திருக்கின்றனர். 63000 அகதிகள் யாழ் செல்ல தயாரகவுள்ளனர். மிகுதி லட்சத்துக்கு மேலான அகதிகள் அரசின் இராணுவக்கட்டுப்பாட்டு பகுதிகளில், புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளில் உணவு மருந்துப் பற்றாக்குறையால் உறைவிடப் பிரச்சனையால் தினம் தினம் உயிர்விட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் சந்திரிகாவின் மக்கள் கூட்டணி அரசு, யாழ்ப்பாண மக்களுக்கு உணவும் – மருந்தும் –பிற பொருள்களும் எடுத்துச் செல்ல தரைவழிப்பாதை தேவைப்படுவதாக கூறி முதலைக் கண்ணீர் விட்டபடி **''வெற்றி நிட்சயம்''** இராணுவ நடவடிக்கையை நடத்துகிறது. கடல்வழியாக உணவும் மருந்தும் கொண்டு செல்ல ICRCயும், UNHCRம் புலிகளுடன் பேசி அரசு கப்பல்களுக்கு பாதுகாப்பு கோருகிறது. சந்திரிகாவின் ராஜதந்திரம் எவ்வளவு நரித்தனமானது. அகதிகள் யாழ் திரும்பும் விடயத்தில் UNHCRக்கும் புலிகளுக்கும் இடையில் கூட வேறுபாடுகள் வெளிப்படுகிறது. 96ம் ஆண்டில் மட்டும் அரசு கட்டுப்பாட்டு பகுதியான யாழில் 810 பேர் காணமல் போயுள்ளனர், யாழுக்கான அரசின் 'மனிதவுரிமைச் சங்கத்தை' கண்டித்ததுடன் 500க்கும் மேலான காணமல் போனவர்களின் பெற்றோர் சித்திரை 29ல் யாழ் அரசாங்க அதிபர் பணிமனையை முற்றுகையிட்டு தங்கள் மனக்கொதிப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.

1983 யூலையில் வடக்கு கிழக்குக்கு வெளியே தெற்கின் நடுத்தெருவில் அப்பாவித் தமிழர்களை, சிறையில் போராளிகளை இனவாதிகளும், அரசகுண்டர் படையும் படுகொலை செய்தபோது பாதுகாப்பு படைகளின் ஆயுதங்கள் இனவாதிகளை பாதுகாத்தது, J.R. சிங்கள மக்களின் உணர்வுகளை கட்டுப்படுத்த முடியவில்லை என்றார் உலகம் நம்பவில்லை. **அந்த கறுப்பு யூலையை கண்டித்தது.**

1997 யூலையில் தமிழர்கள் தாய்மண் வன்னியில் செல் தாக்குதலால், வீட்டுக்குள்ளும், பதுங்குகுழிகளிலும் கூட சாகிறார்கள், விமானக்குண்டு வீச்சுக்கும் பீரங்கி தாக்குதலுக்கும் இரையானவர்கள் போக எஞ்சியவர் இடம் பெயர்ந்து அகதிகளாக ஓடுகிறார்கள். யாழிலும் கிழக்கிலும் தினம் தினம், தேடுதல் வேட்டை, கைது, சித்திரவதை பாலியல் பலாத்காரம் என மனிதவுரிமைகள் மிதிக்கப்படுகிறது, மனிதர்கள் மட்டுமல்ல யாழில் இராணுவ ஆக்கிரமிப்பில் 2.5 மில்லியன் பனைமரம் தறிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி பிரதான சாலையில் 2115 பெரிய மரங்கள் அடியோடு வீழ்த்தப்பட்டிருக்கிறது. கொழும்பில் உள்ள தமிழர்களின் வீடுகள் பின்னிரவு நேரங்களில் திடீர் திடீர் என சோதனையிடப்படுகிறது. பெண்கள் இரவு நேர ஆடையுடனே பொலீஸ் நிலையம் கூட்டிச் செல்கிறார்கள். இது கொழும்பிலுள்ள 8 தமிழ்க்கட்சிகளின் கூட்டுக் கண்டனம் இத்தனையும் செய்வது ஸ்ரீலங்கா இனவாத அரசின் முப்படைகள் சந்திரிகா அரசு இது **''சமாதானத்துக்கான யுத்தம்'' ''தமிழர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி அரசியல் தீர்வும் அதிகார பகிர்வும் கொடுப்பதற்கான யுத்தம்''**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என்கிறார், உலகம் நம்புகிறதா ? இல்லையா ? ஏன் 97 கறுப்பு யூலையை கண்டிக்க மறுக்கிறது ?.

இன ஒடுக்குமுறை, இன அழிப்பு செய்யும் அரசுகள் நடத்தும் யுத்தம், பேசும் சமாதானம் அநீதியானதா ?

இன ஒடுக்குமுறை, இன அழிப்புக்கு எதிராகப் போராடும் மக்கள் செய்யும் யுத்தம் – அடைய விரும்பும் சமாதானம் அநீதியானதா ? இதைப் பகுத்து பார்க்க முடியாதவர்கள் சந்திரிகாவின் சமாதானத்தை, அதற்கான யுத்தத்தை நம்புகிறார்கள். ஆதரிக்கிறார்கள் பகுத்தறிவுள்ளவர்கள் சந்திரிகா அரசின் 97 கறுப்பு யூலைப் படுகொலைகளையும் கண்டிப்பார்கள்.

இந்தியாவில் இனவுணர்வுள்ள தமிழ்நாட்டு மக்களும், சனநாயக அமைப்புக்களும் அரசியல் கட்சிகளும், மீனவர் சங்கங்களும் ஸ்ரீரலங்கா அரசின் படுகொலையை கடையடைப்பு, ஊர்வலம், உண்ணாவிரதம், 1 இலட்சம் மனு என கண்டிக்கிறார்கள். ஈழத்தமிழர்களுக்கு ஆதரவு தெரிவிக்கின்றனர். இந்நிலையில் தமிழ் நாட்டிலுள்ள தமிழ் அகதிகள், அகதி அமைப்புக்கள் தமது தாய்மண்ணைச் சூறையாடும் ஸ்ரீலங்கா அரசைக் கண்டிக்க, துன்பத்தில் வாடும் சொந்த சகோதர்களுக்கு அனுதாபம் தெரிவிக்க தயார் இன்றி இருப்பது வேதனையளிக்கிறது. ***"சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டும் சிந்தை கலங்காரடி கிளியே, செய்வது அறியாரடி கிளியே"*** *(பாரதி)* தமிழ் நாட்டில் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக கடையடைப்பு நடக்கும் நாளில் சினிமாவுக்கும், சுற்றுலாவுக்கும், முகாமில் கோயில் கட்ட பணம் திரட்டுவதும், சீட்டாடுவதும், விளையாட்டு போட்டி நடத்துவதும் "அகதிகள் கோழைகள்" "சுயமரியாதை, தன்மானம் அற்றவர்கள்" "தாய்மண் பற்றில்லாதவர்கள்" என மொத்த அகதிகள் மேலும் பழி சுமக்கவைக்கிறது. தன்மானம், சுயமரியாதை, தாய்மண் பற்றுள்ள அகதி மக்களே! 83 கறுப்பு யூலையை நினைவு கூர்வோம். 97 கறுப்பு யூலைப் படுகொலைகளைக் கண்டிப்போம்! இந்தியாவில் உள்ள அகதிகள் நாடு திரும்புவதற்காக 'ஈழ அகதிகள் உரிமைக் கழகம்' முன்வைத்துள்ள 22 அம்சக் கோரிக்கைகளில் ஒன்றுபடுங்கள்.

– ஆசிரியர் குழு –

## சிந்தனைகள் இதுவா ?

*ஓ... என் இனிய அகதித்தமிழா*
*நீ இங்கே அடைக்கலமாய்*
*அகதி முகாமில்*
*அங்கே ஈழத்தில்*
*உன் இனிய உடன்பிறப்பு*
*அடைக்கலம் தேடி*
*அவதிக் கானகத்தில்*
*இங்கே தெருவிழாக்களில்*
*வெடி கொளுத்தி*
*மகிழ்வோசை....*
*அங்கே செல்களின்*
*வெடியோசையில் அழுகுரல்*
*மௌன விம்மல்களாய்*
*விசும்பல்களாய்! – இன்றும்*
*நம் மக்கள்*
*இந்திய மண்ணை அகதிக்*
*தரிசனத்திகாய்...*
*ஆழ்கடலை தாண்டும்போது*
*விசைப்படகுகளின் விசும்பலில்*
*திசைமாறும் உடல்கள்...*
*இங்கே திரையரங்குகளில்*
*புதிய படங்களின்*
*தரிசனத்திற்காய் நாங்கள்*
*வரிசையில் முந்துகின்றோம்!*
*அங்கே முழுப்பட்டினிக்கு*
*அரை வயிற்றுக்கிரை தேடும்*
*மனிதப் பிறவிகள்! இங்கே*
*அடுத்த வீட்டு அகதிக்கு*
*ஆட்டுக்கறி – என் வீட்டில்*
*கோழிக்கறியென*
*குறை தேடும் நாங்கள்! – இங்கே*
*தொலைக்காட்சியில் சுகமாக*
*கொலைக்காட்சி ரசிக்க*
*அங்கே கொலக்களத்தில்*
*தொலைகின்றது தமிழன் உயிர்...*
*தொலைந்து போனது விடுதலை*
*சிந்தனையை தொலைக்காதே.....*

*மனிதன்.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஈழ அகதிகள் உரிமைக் கழகத்தின் 22 அம்ச கோரிக்கைகள்

சிறீலங்கா சிங்கள பௌத்த இனவாத அரசின், தமிழ் இன ஒடுக்குமுறை வரலாறு, 1983 இன் பின்பான அரசின் தமிழ் இன அழிப்பு வரலாறு இரண்டிலும் தமிழ் மக்களில் 30% மக்கள் அகதிகளாகியுள்ளனர், முதல் வரலாற்றில் சொந்த நாட்டில் - தெற்கில் இருந்து வடகிழக்கு தாய்மண்ணுக்கு ஆயிரக்கணக்கில் அகதிகளாக வந்தார்கள், பின்னை இன அழிப்புயுத்த வரலாற்றில் வடக்குக்கும், கிழக்குக்கும் உள்ளேயே அகதிகளாக இடம் பெயர்ந்தார்கள் இலட்சக்கணக்கான தமிழீழ மக்கள், இந்தியாவுக்கு அகதிகளாக கடல்வழியாக சென்றார்கள், அய்ரோப்பிய அமெரிக்க நாடுகளுக்கு வான்வாழியாக புலம் பெயர்ந்தார்கள். அகதிகளின் வரலாற்றில் தமிழ் இன அழிப்பு யுத்தத்துக்கு தலைமை தாங்குவதில் இருபெரும் சிங்கள இனவாத ஆளும் கட்சிகளில் ஒன்றான U.N.P. அரசு மாறி 1994ல் SLFP தலைமையிலான 'மக்கள் கூட்டணி' ஆட்சிக்கு வந்தது. சந்திரிகா தலைமையிலான அரசு 96இல் யாழ்ப்பாணத்தை புலிகளிடம் இருந்து கைப்பற்றியது, தொடர்ந்து வடக்கு முழுவதையும் கைப்பற்றும் இன அழிப்பு யுத்தத்தை உக்கிரமாக வன்னி பெருநிலப்பரப்பில் நடத்திக் கொண்டிருக்கிறது. இன ஒடுக்குமுறை-இன அழிப்பு யுத்தத்தின் விளைவு இலங்கைக்குள் இலட்சக்கனாக்கான தமிழீழ அகதிகள். பசி, பட்டினி பிணியில் வாடுகின்றனர், இதில் சில ஆயிரம் முஸ்லீம் அகதிகள் வடக்கிலிருந்து புலிகளால் வெளியேற்றப்பட்டவர்கள், இலங்கைக்கு வெளியே இந்தியாவிலும், அய்ரோப்பாவிலும், அமெரிக்க நாடுகளில் பல இலட்சம் அகதிகள் இவர்களில் சில ஆயிரம் பேர் முன்னாள் பேராளிகள், சக இயக்க மோதலில், உள்ளியக்க கொலைகளி லிருந்து தப்பி நாட்டைவிட்டு வெளியேறி அகதிகளாக வுள்ளனர். இந்த அகதிப் பேராளிகளில் பெரும்பான் மையினர் இந்தியாவின் சிறப்பு முகாம்களில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள்.

சிறீலங்கா இனவாத அரசின் தமிழ் இன அழிப்பு யுத்தமும், இன ஒடுக்குமுறைக்கும் எதிரான தமிழீழ மக்களின் போராட்டம் என்றுமில்லாத நிலையில் ஒரு முக்கிய கட்டத்தை அடைந்து கொண்டிருக்கிறது, சந்திரிகா அரசு, ஜி.எல். பிரீஸ் கூறுவது போல் "இரட்டை உத்திகளை" பின்பற்றுகிறது.

உண்மையில் இந்த இரட்டை உத்தி என்பது இன ஒடுக்குமுறைக்கு எதிராக போராடுபவர்களை இன அழிப்பு யுத்தத்தின் மூலம் வென்று அடக்குவது. இரண்டு அரசியல் தீர்வு என்ற பெயரில் வெறும் "அதிகார பரவல்" மூலம், இன ஒடுக்கு முறைக்கு முடிவுகட்டும். இன சமத்துவத்தை முன்நிறுத்தும் "திம்புக் கோரிக்கைகளை" திட்டத்தை திசை திருப்பி முழ்கடித்துவிடும் செயல் நடந்து கொண்டிருக்கிறது. இலங்கையின் அரசியலிலும் - யுத்தத்திலும் ஏற்பட்டு வரும் இந்த மாற்றம், இலங்கைக்கு வெளியே இந்தியாவில் "அகதி அந்தஸ்து" இன்றி வாழும் தமிழீழ அகதிகளின், அய்ரோப்பிய, அமெரிக்க நாடுகளில் குடியுரிமை பெறதாத தமிழீழ அகதிகளின் வாழ்க்கையிலும் மாற்றத்தை ஏற்படுத்தப்போவது திண்ணம்.

சிறீலங்காவுக்கு தமிழீழ அகதிகளை எப்போது திருப்பி அனுப்ப முடியும் என காத்துக் கொண்டிருக்கும் இந்தியாவும், சுவிஸ்ஸர்லாந்தும் இலண்டனும்.... மற்றும் நாடுகளும், இலங்கையில் ஏற்பட்டுவரும் அரசியல் யுத்த மாற்றத்தை உன்னிப்பாக கவனித்து வருகின்றன. தங்கள் நாடுகளிலுள்ள தமிழீழ அகதிகளை சிறீலங்கா அரசின் கைகளில் நேரடியாகவோ, ஒப்பந்தங்கள் செய்தோ, அகதிகள் நாடு திரும்புவதற்கான சூழ்நிலைமைகள் உருவாகிவிட்டதாக காட்டியோ, சில சமயம் நிர்ப்பந்தங்கள் மூலமாகவோ தமிழீழ அகதிகள் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படலாம், இதற்கான தயாரிப்புக்கள் இரகசியமாகவும், வெளிப்படையாகவும் நடந்து கொண்டிருக்கிறது.

இந்தியாவிலுள்ள சிறப்பு முகாம் அகதிப் பேராளிகளை முதல் கட்டமாக இலங்கைக்கு அனுப்பும் ஏற்பாடுகள் பற்றி ஆலோசிக்கப்படுவதாக அறியமுடிகிறது. 98 தை மாதத்தில் இருந்து இராமேஷ்வரம்-மன்னார், திருகோணமலைக்கும் இடையில் கப்பல் ஓடத் தொடங்கும் என செய்திகள் வெளிவருகிறது.

ஆடி 23ல் அதிகார பரவல் திட்டத்தை கொழும்பிலுள்ள அமெரிக்க நாடுகளின், அய்ரோப்பிய நாடுகளின் தூதுவராலயங்கள் வரவேற்றுள்ளன, இத்திட்டத்தை அமுல்படுத்த சந்திரிகாவுக்கு உதவுவதாக தூதுவர்கள் வாழ்த்து அனுப்பியுள்ளனர்.

1983ம் ஆண்டில் இருந்து இந்தியாவில் தங்கியுள்ள தமிழீழ அகதிகள், இலங்கையில் ஒரு நிரந்தர யுத்த நிறுத்தம், அரசியல் தீர்வு, சமாதானம் ஏற்படாமல் பல தடவை தன்னிச்சையாகவும், நிர்ப்பந்தம் மூலமாகவும் இலங்கைக்கு திருப்பி அனுப்பப் பட்டிருக்கிறார்கள், அதே போன்று மீண்டும் மீண்டும் நாட்டை விட்டு வெளியேறி இருக்கிறார்கள், 1985இல் திம்பு பேச்சுவார்த்தை நடந்த சமயமும், பின் 1987 இந்திய - இலங்கை ஒப்பந்தம் நடந்தபோதும், 1992இல் இராஜீவ் கொலைக்குபின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



திட்டமிட்டு நிர்ப்பந்தமாகவும் இலங்கைக்கு அனுப்பப்பட்டார்கள் தமிழீழ அகதிகள், 1996 யாழ்ப்பாணம் மீது இன ஆக்கிரமிப்பு யுத்தம் நடந்தபோதும், இன்று வன்னியில் யுத்தம் கொழுந்துவிட்டு எரியும் வேளையில் தஞ்சம் கோரி தமிழ்நாட்டுக்குள் நுழையும் அப்பாவி தமிழீழ அகதிகளை இந்திய மத்திய – மாநில அரசுகள் வேண்டா வெறுப்புடன் அனுமதிப்பதும் உலகம் அறிந்த செய்திகள்.

இந்தியாவிலிருந்து 1985ல் யுத்தம் நிறுத்தப் பட்டுவிட்டது என நம்பி இலங்கைக்கு வந்த அகதிகள் 86ல் திரும்பிப் போனார்கள், 1987 ஒப்பந்தத்துடன் அமைதியும் சமாதானமும் கிடைத்துவிடும் என திரும்பிய அகதிகள் 88ல் அமைதியின் யுத்தத்தத்துக்கு அஞ்சி மீண்டும் அகதிகளாக ஓடினர். 1992 நிர்பந்தப்படுத்தப்பட்டு இலங்கைக்கு அனுப்பப்பட்ட அகதிகளில் மன்னாரிலும். திரிகோணமலையிலும் UNHCR இன் தற்காலிக முகாம்களில் பலர் தங்கினர். 1996 யாழ் அகதிகளுடன் இந்த தற்காலிக முகாம்களின் அகதிகளும் சேர்ந்து கடல் தாண்டி தமிழ்நாட்டில் தஞ்சம் கோருகின்றனர். அந்தளவுக்கு சந்திரிகா அரசின் சமதானத்துக்கான யுத்தம் கொடூரமானதாக இருக்கிறது இந்தியாவிலுள்ள தமிழ் அகதிகளில் முகாம்களில் உள்ள அகதிகளே இவ்வாறு அங்கும் இங்குமாக நாட்டுக்கு நாடு அலைக்கழிக்கப்படுகிறார்கள். காரணம் முகாம் வாழ்விலுள்ள எல்லா நெருக்கடிகளும் இந்தியாவின் நிர்ப்பந்தங்களும் "தாய் நாட்டுக்கு போ... போ" என வற்புறுத்துகிறது, திரும்பி வந்த பின் சிறீலங்கா அரசின் யுத்த கோரம், பிணக்குவியல் "உனது உயிரையாவது பாதுகாக்க ஓடு... ஓடு" என மீண்டும் மீண்டும் இந்தியாவுக்கு விரட்டுகிறது.

1958இல் தொடங்கிய தமிழ் அகதிகளின் வரலாறு நீண்டநெடியது. ஆனால் இதுவரை தமிழீழ அகதிகள் மத்தியிலிருந்து தங்களின் உரிமைக்காக பேசும் போராடும் ஒரு அகதி அமைப்பு உருவாகவில்லை, அகதிகளை "தொட்டுக்க" பயன்படுத்துவது என்ற நோக்கிலேயே அகதிகளைப் பற்றி பேசுபவர்களும், தொண்டாற்றுபவர்களும் நடந்து கொள்கிறார்கள், அகதிகள் நாட்டைவிட்டு வெளியேறுவதையும் மீண்டும் நாட்டுக்கு திருப்பி அனுப்பப்படுவதையும் 'அறிக்கைகள் அளவில்' பேசுவது, எதிர்ப்பதற்கு அப்பால், அகதிகளின் குறுகிய கால தீர்வு நலன், நீண்டகால நிரந்தரத்தீர்வு நலன் என்ற நோக்கில் அகதிகளே அவர்களின் பிரச்சனைகளைப் புரிந்து கெண்டு தமது உரிமைகளைப் பெற தட்டிக்கேட்கவும், போராடிப் பெறவும் முடியாத நிலையில் "நடப்பது நடக்கட்டும்" என்ற கையறு நிலையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

தமிழீழ அகதிகளின் வரலாறு 40 ஆண்டுகளைநெருங்கிவரும் வேளையில் அவர்கள் தொடர்ந்து சந்தித்துவரும் இன்னல்களை இடர்பாடுகளை நீக்க அகதிகளே விழிப்புணர்வு பெறவும், அன்னிய நாடுகளில் அகதிகள் முகங்கொள்ளும் வேதனையான வாழ்க்கைக்கும், இலங்கைக்கும் – இந்தியாவுக்கும் என அலைக்கழிக்கப்படுவதை நிறுத்தும், எதிர்கால வாழ்வில் நம்பிக்கையை மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய முறையில் "ஈழ அகதிகள் உரிமைக்கழகம்" (ERRO) இந்தியாவிலுள்ள தமிழ் அகதிகள் மத்தியில் 22 அம்ச கோரிக்கை விழிப்புணர்வு பிரச்சாரத்தை தொடக்கியுள்ளது.

அகதிகள் மத்தியில் வேலை செய்யும் அமைப்புகள், அகதி நலனுக்காக வெளிவரும் சஞ்சிகைகள், பத்திரிகைகள் "ஈழ அகதிகள் உரிமைக்கழகம்" முன்வைக்கும் 22 அம்ச கோரிக்கைகளுடன் உடன்படின் 22 அம்ச கூட்டுகளச் செயற்பாட்டுக்கு வருமாறு அழைக்கிறது. இக்கோரிக்கைகளை மேலும் செழுமைப்படுத்தி கூட்டுக்கான செயற்பாட்டில் அகதிகள் நலன் சார்ந்த அமைப்புகள், வெளியீடுகள் பங்கேற்க்க விரும்பினால் அதற்கும் தயாராக இருக்கிறது. "ஈழ அகதிகள் உரிமைக்கழகம்" EEELAM REFUGEE RIGHTS ORGANIZATION

## அகதிகளுக்கான அரசு உதவி வேறுபாடு

| | அ.தி.மு.க. அரசு | தி.மு.க. அரசு |
|---|---|---|
| * *15 நாளுக்கு ஒருமுறை அகதிக்குடும்பத் தலைவருக்கு* | *75/-* | *100/-* |
| * *12 வயதுதக்கு மேற்பட்டவர்களுக்கு* | *60/-* | *60/-* |
| * *12 வயதுக்குள் உள்ளவர்க்கு* | *35/-* | *35/-* |

*அகதிகளுக்கு மூன்று பிரிவாக பிரித்து வழங்கும் உதவிகளில் எல்லார்க்கும் தி.மு.க. அரசு பண உதவியைக் கூட்டவில்லை. குடும்பத் தலைவர்க்கு மட்டுமே கூட்டியுள்ளது அதிர்ச்சியளிக்கிறது. உதாரணமாக 90ஆம் அகதியாக நுழையும் போது ஒரு பிள்ளைக்கு வயது 10. இதற்கான உதவத் தொகை 35/- இன்று 97ல் பிள்ளையின் வயது 17 ஆனாலும் உதவித்தொகை 35/- தான். அகதியாக நுழையும்போது 12 வயதுக்குள் பதியப்பட்ட அத்தனை அகதிப் பிள்ளைகளின் நிலையும் இதுதான். எத்தனை கொடுமை. இந்த அகதி வாழ்வில். சிந்தியுங்கள்*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





தமிழ்நாட்டின் அகதி முகாம் ஒன்றில் அகதிகளின் வாழ்க்கை சித்திரம்

**இந்தியாவிலுள்ள தமிழீழ அகதிகள் அனைவரும் நாடு திரும்ப வேண்டின் அகதி மக்களின் 15 அம்ச கோரிக்கைகளை சர்வதேச சமூகத்தின் முன் சிறீலங்கா அரசு அங்கீகரிக்க வேண்டும்.**

1. வடக்கு கிழக்கு முழுவதும் முழுமையான நிரந்தர யுத்த நிறுத்தமும், இனப்பிரச்சனைக்கு சரியான நிரந்தர அரசியல் தீர்வும் ஏற்படவேண்டும், அதுவரை பகுதிவாரியான யுத்த நிறுத்தத்தை காட்டி அரசின் கட்டுப்பாட்டு பகுதிக்குள் மட்டும் அகதிகளை அழைப்பதை கைவிடவேண்டும்.
2. நாடு திரும்பும் அகதிகளின், நாட்டுக்கு வெளியே பிறந்த குழந்தைகளுக்கு இலங்கைக் குடியுரிமையும், அகதிகளுக்கு முழுப்பாது காப்புக்கும் உத்திரவாதம் கொடுக்கவேண்டும்.
3. நாடு திரும்பும் அகதிகள் வரவேற்பு முகாம்களிலிருந்து நேரடியாக அவர்களின் சொந்த இருப்பிடங்களுக்கு செல்ல போக்குவரத்து உதவி ஏற்பாடு செய்யவேண்டும், தற்காலிக முகாம்களில் ஒரு மாதத்துக்கு மேல் தங்கவைக்ககூடாது, ஒவ்வொரு குடும்பத்துக்கும் குடியமர்வுப்படி 5000/- ஒரே தவணையில் வழங்கவேண்டும்.
4. அகதிகளின் சொந்த வீடுகளில் விவசாய நிலங்களில், மீன்பிடிக்கும் கடல் பகுதியில் உள்ள கண்ணி வெடிகள் முழுமையாக அகற்றப்பட்டிருக்க வேண்டும்.
5. இந்தியாவில் சிறப்பு முகாம்களில், சிறைகளில் உள்ள முன்னாள் போராளிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கவேண்டும். அவர்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் விரும்பிய பகுதியில் குடியேற அனுமதிக்கவேண்டும்.
6. நாடுமுழுவதும் அகதிகள் சுதந்திரமாக நடமாடுவதற்கான அடையாள அட்டையும் அனுமதிச் சீட்டும் குறிப்பிட்ட ஆண்டுகளுக்கான அனுமதியுடன் உடனடியாக வழங்கவேண்டும் தினசரி/வாரம் அனுமதிச் சீட்டு வழங்கும் முறை நிறுத்தப்படவேண்டும்.
7. தற்காலிக முகாம்களில் அகதிகளுக்கான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உணவுப்பங்கீடு, உதவித் தொகை தெளிவாக முன்னதாக தீர்மானிக்கப்படவேண்டும், சொந்த இருப்பிடங்களுக்கு சென்ற பின்னர் 6 மாதம் வரை எல்லா அகதிகளுக்கும் அதே அளவு உணவுப் பங்கீடு இலவசமாக வழங்கவேண்டும். உணவுவில்லை (Food - Stamps) ஆக வழங்கலாம்.

8. எல்லா அகதிகளுக்கும் அனைத்து நோய்களுக்குமான மருத்துவ வசதி இலவசமாக 6 மாதங்களுக்கு வழங்குவதுடன் குழந்தை களுக்கும் + கர்ப்பிணி தாய்மார்களுக்கும் சிறந்த ஊட்டசத்தும் வழங்கவேண்டும்.

9. சொந்த இருப்பிடம் திரும்பிய அகதிகள், தற்காலிகமாக குடியிருப்பு அமைத்திட 5000/–ம் வீட்டைப் திருத்திகட்ட தவணைக் கொடை 20,000/– ம் வழங்கவேண்டும். புதிதாக வீடு கட்ட வேண்டியவர்களுக்கு 1,00,000 முதல் 2,50,000 ரூபாய் வரை 3% வட்டியுடன் 15 ஆண்டுகளில் திருப்பி செலுத்தும் கடன் வழங்கவேண்டும்.

10. முகாமிலுள்ள விவசாயிகள், மீனவர்கள், சிறுவியாபாரிகள், கைத்தொழில் செய்வோர் வாங்கிய பழைய வங்கிக்கடன் முழுவதையும் இரத்து செய்யப்படவேண்டும்.

11. நாடு திரும்பும் அகதிக் குழந்தைகளுக்கு 5ம் வகுப்பு வரையிலான கல்வி பரிட்சைக் கட்டணம் கூட அளவிடாது அனைவருக்கும் இலவசக்கல்வி கொடுக்கவேண்டும். ஆரம்ப கல்வி கற்றலுக்கான வயது எல்லைகள் கூட தேவையைப் பொறுத்து மாற்றி அமைக்கவேண்டும், இந்தியாவில் கல்வி கற்றபடி நாடு திரும்பும் மாணவ – மாணவியர்க்கு தொடர்ச்சியான அடுத்த வகுப்பு கல்வி கொடுக்கவேண்டும்.

12. பொது மன்னிப்பு வழங்ககப்பட்டு நாடு திரும்பும் முன்னாள் போராளிகளுக்கு அரசின் வடக்கு கிழக்கு பாதுகாப்பு படை வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்கவேண்டும், தொழிற்கல்வி பயிற்சி இலவசமாக வழங்கவேண்டும்.

13. விவசாயிகள், மீனவர்கள், சிறுவியாபாரிகள், சுயதொழில் முனைவோருக்கு அரசு 1,00,000 முதல் 5,00,000 வரை 5% வட்டியுடன் 10 ஆண்டுகளில் திருப்பி செலுத்தும் கடனாக வழங்கவேண்டும். சுயதொழில் முனைவோருக்கான மொத்த கடனில் அகதி முகாம்களில் சுயதொழில் பயிற்சி முடித்தவர்களுக்கு கடன் முன்னுரிமை கொடுக்கவேண்டும். மீனவர்களிடம் பறிமுதல் செய்த படகு, வள்ளம், வலை திருப்பிக் கொடுக்கவேண்டும் அல்லது அதற்கான நஷ்டஈடு வழங்கவேண்டும்.

14. நாடு திரும்பும் அகதிகளுக்கு வேலைவாய்ப்பு திட்டத்தில் தகுதி அடிப்படையில் வேலை வழங்குவதுடன், அரசு வேலைவாய்ப்பில் கடைநிலை வேலைகளில் சேர்த்துக்கொள்ள உத்திரவாதம் கொடுக்கவேண்டும். இதிலும் தேவைப்படின் வயது வரம்பு மாற்றியமைக்க வேண்டும். இந்தியாவில் உயர்கல்வி, இளநிலை முதுநிலை பட்டப்படிப்பு படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கவேண்டும். குறிப்பாக முகாம்களிலிருந்தும் அரசு உதவி பெற்றும் படித்தவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும், அரசு பணியாளர்களாக இருந்தவர்கள் அதே பணியில் தொடர்ந்து ஈடுபட அனுமதிக்கவேண்டும்.

15. அகதிகளாக கடல் தாண்டுகையிலும், யுத்தத்திலும் பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கும், கணவனை இழந்த விதவைப் பெண்களுக்கும், பிள்ளைகளை இழந்த 50 வயது தாண்டிய வயோதிபர்களுக்கும் பொதுநல விடுதி வடக்கிலும் கிழக்கிலும் தனித்தனியாக கட்டிக் கொடுக்கப் படவேண்டும், உணவு உடை உறையுள் சுகாதாரம் பாதுகாப்பு வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கும் முழுப் பொறுப்பையும் அரசு ஏற்க வேண்டும்.

## இந்தியாவிலுள்ள தமிழ் அகதிகள் இலங்கைக்கு திரும்ப வேண்டின் இந்திய மத்திய – மாநில அரசுகள் அகதி மக்களின் 7 அம்ச கோரிக்கைகளை அங்கீகரித்து ஆதரவளிக்க வேண்டும்.

1. சிறீலங்கா அரசுக்கு தமிழ் அகதிகள் முன்வைத்துள்ள நியாயமான 15 அம்ச கோரிக்கைகளை சிறீலங்கா அரசு அங்கீகரிக்கும் வரை, சிறீலங்கா அரசுடன் அகதிகளை திருப்பி அனுப்புவதற்கான எந்தப் பேச்சுவார்த்தை களையும், ஒப்பந்தங்களையும் இந்தியரசு செய்யக்கூடாது, மறுபுறம் அகதிகளை வெளியேற்ற எந்த வயிலும் நிர்ப்பந்திக்கக் கூடாது. தொடர்ந்தும் தமிழ்நாட்டுக்கு வந்து கொண்டிருக்கும் அகதிகளை அனுமதிக்க வேண்டும்.

2. 15 அம்ச கோரிக்கைகளை அகதி முகாம்களிலும், முகாமுக்கு வெளியிலுள்ள அகதிகள் மத்தியிலும் முன்வைத்து விழிப்புணர்வுப் பிரச்சாரம் செய்யவும் அகதிகளை அக்கோரிக்கைகளுக்காக ஒன்று திரட்டவும், பொதுக்கருத்தை உருவாக்குவதற்கான அகதிகளின் அடிப்படை சனநாயக உரிமைகளை யும் அங்கீகரித்து அனுமதியளிக்கவேண்டும். அத்துடன் முகாம்களில் கலை இலக்கிய வட்டங்களை செயற்பட அனுமதிக்கவேண்டும்.

www.tamilarangam.net



3. சிறிலங்கா அரசு அகதிகளின் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் தமிழ்நாட்டில் உள்ள அகதிகள் இலங்கைக்கு திரும்பும்போது அகதிகளிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட படகு, வள்ளங்களை மாநில அரசு திருப்பிக் கொடுக்கவேண்டும்.

4. தமிழ்நாட்டு சிறப்பு முகாம்களிலும், சிறைகளிலும் உள்ள முன்னாள் போராளிகளுக்கு சிறீலங்கா அரசு வெளிப்படையாக பொது மன்னிப்பு அளித்து ஏற்றுக் கொள்ளாதவரை, சிறீலங்கா அரசின் கைகளில் அவர்களை ஒப்படைக்கக்கூடாது.

5. இந்திய மத்திய – மாநில அரசுகளின் அரசியல் சாசன ரீதியான சட்டதிட்டங்களுக்கும், அய்நா சபையின் அகதிகளுக்கான மனிதவுரிமைக் கொமிஷனின் UNHCR இன் சர்வதேச சட்டங்களுக்கு உட்பட்டும் இவ் 22 அம்ச கோரிக்கைகளுக்காக செயல்படும் தமிழ் அகதிகளை சுதந்திரமாக செயல்பட மத்திய – மாநில அரசுகள் அனுமதியளிக்கவேண்டும்.

6. தமிழ் நாட்டில் உள்ள தமிழீழ அகதிகளுக்கு, 15 ஆண்டுகளாகியும் ''அகதி அந்தஸ்து'' வழங்கப்படவில்லை, அய்நாசபையின் அகதிகள் பற்றிய சட்டங்களை ஏற்றுக் கொண்டுள்ள இந்திய அரசு தமிழீழ அகதிகளுக்கு உடனடியாக "அகதி அந்தஸ்து" கொடுக்கவேண்டும்.

7. ஆண்டுக்கு ஒருமுறை அகதி முகாமிலுள்ள குடும்பங்களுக்கு உடைகளும் சமையல் பாத்திரங்களும் மண்டபம் முகாமில் வழங்கப்படுகிறது. இந்நடைமுறையை எல்லா முகாம்களுக்கும் அமுல் படுத்தவேண்டும், உற்றார் உறவினர் வசிக்கும் முகாம்களுக்கு தமது பதிவை மாற்றம் செய்ய விரும்புவர்களுக்கு அனுமதி கொடுக்கவேண்டும், மழையையும் – வெய்யிலையும் தாங்க முடியாத நிலையிலுள்ள வீடுகளை திருத்தி அமைத்து கொடுக்கவேண்டும். அகதி மாணவர்களுக்கு இலவச சத்துணவும், இலவச பாடநூல், அப்பியாச புத்தகங்களும் வழங்கும் திட்டத்தை முறையாக கண்காணித்து அமுல்படுத்தவேண்டும், இதுபோன்ற அகதிமக்களின் பிரச்சனைகளை தமிழ் நாட்டு அரசும், மறுவாழ்வுத் துறையும் மனித நேயத்துடன் உடனடியாக தீர்க்கவேண்டும்

இந்தியக்கிளை

**ஈழ அகதிகள் உரிமைக்கழகம்**

Eelam Refugee Rights Organisation

அனைத்து தொடர்புகளுக்கும்

Miss. **U. CLARA**
3131 EGLINTON EAST
# 110 SCARBOROUGH
MIJ 2G6 ONTARIO
**CANADA**

### சிறப்பு முகாம் ஒரு மூடாத கல்லறை

மத்திய அரசின் தவறா?
மாநில அரசின் தவறா?
என்பதை நாமறியோம்
சிறப்பு முகாமில் வாடும்
நாமறிந்ததெல்லாம்
முகாம் சுவர் வலிது!

சிறப்பு முகாமின்
சித்திரவதைகளினால்
ஒவ்வொரு நாளும்
ஆண்டாய்க் கழியும்
ஆண்டின் நாட்களோ
நீண்டு தெரியும்

சிறப்பு முகாம் ஒரு மூடாத கல்லறை
அப்படியானால் அகதிகள்
உயிரோடு இருக்கும் பிணங்கள்

**பாலன்**
சிறப்பு முகாம்

### யுத்தம்

வசந்த காலம்
காற்றினால் காவிச்செல்லப்பட்டு
கொலைசெய்யப்பட்டது

பிரபஞ்ச வெளிகள் எல்லாம்
குருதித் தடயங்கள்
புறநிலைக்குள்ளும்
அகநிலைக்குள்ளும்
அவலக்கதறல்

எங்கும் எழுந்து எரிகிறது நெருப்பு
வெடித்துச் சிதறுகிறது உயிர்கள்
துடித்துப் பிரிகிறது இயக்கம்
உடைந்து அமிழ்கிறது தேசம்
சுருள் சுருளாய் கருமலைப்பாம்பாய்

திசைதேடிச் சென்றது
அகதிக்காற்று
அண்டமெங்கும் சிதறி ஓடியது
மனிதம்... மனிதம்....

-பாமதி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எப்போ வரும் கப்பல்

சிறுகதை

சங்கரி ஆச்சிக்கு இப்போது வயது எழுபது. இன்று அவர் தங்கி இருப்பது தமிழ்நாட்டின் ஒரு அகதி முகாம். அந்த ஆச்சி கடந்த மூன்று மாதங்களாக

"மெய்யேடா தம்பி எப்போ வரும் கப்பல்?"

என்று முகாமில் இருக்கும் பலரிடம் கேட்பதுண்டு. இப்படி இவர் கேட்பதை பலர் கிண்டலாக

"ஆச்சிக்கு சாடையா தட்டிட்டுது" (மூளை பிசகிவிட்டது) என்றும் கூறுவதுண்டு.

ஆச்சி இன்றைக்கு நேற்றைக்கு எப்போ வரும் கப்பல் என்று கேட்கவில்லை. தனது ஐம்பது வயதுகளிலேயே கேட்க ஆரம்பித்துவிட்டார். ஆம் அது காரணத்தோடு மட்டுமல்ல காரியத்தோடும் தான். ஆனால் அன்று கேட்ட தோரணைக்கும் இன்று கேட்கும் தோரணைக்கும் வெகு வித்தியாசம் உண்டு. இன்று கேட்பதில் இழையோடும் சோகம் அன்றில்லை. அதில் ஒரு லாபத்தைக் கருதி ஆர்வத்தோடு கேட்ட விதம்.

ஆம் தமிழ் ஈழப் பிரதேசத்தின் வடக்குப் பகுதியில் வடமராட்சியென்றால் வெகு பிரபல்யம் காரணம் அன்றைய இலங்கை அரசு நிர்வாகப் பொறுப்பில் நிரம்பி வழிந்தவர்கள் வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்தவர்கள் தாம். காவல்துறை, கடற்படை, வான்படை, இராணுவம் அரசு இயந்திரங்களில் மேலான பொறுப்புமிக்க பதவிகளை அதிகமானோர் நிர்வகித்தனர். அது மட்டுமல்ல கல்விப்பொறுப்புகளிலும் அதிகப்பட்சம் ஆசிரியர்களும் வியாபாரிகளும் விவசாயிகளும் இருந்தனர்.

பருத்தித்துறை, வல்வெட்டித் துறை போன்ற மீன் பிடி கடல்சார்ந்த தொழில், கப்பல் ஓட்டும் தொழிலும் நடைபெற்றன. இதுவும் வடமராட்சியின் உள்ளடக்கமே. அதற்காக ஏனைய பிரதேசங்கள் சளைத்தவையல்ல என்பதை கூறித்தான் ஆக வேண்டும்.

சங்கரி ஆச்சரி என்று பெயர் வந்ததே சங்கரன் வாத்தியாரின் மனைவி என்பதால் தான். சங்கரி ஆச்சி வடமராட்சியின் குக்கிராமத்தில் பிறந்தவர். விவசாயக் குடும்பம் செம்மன் பூமியில் செல்வம் கொழிக்கும் வெங்காயம் மிளகாய் உப உணவுப் பயிர்களும், மா, பலா வாழையினங்களும் சங்கரி ஆச்சி, 'அமெரிக்க' மிசன் பள்ளியில் ஐந்தாம் வகுப்பு வரை பயின்று வர காரணமாயிருந்தன. சங்கரன் வாத்தியார் அந்தக் காலத்து எஸ்.எஸ்.எல்.சி அல்ல ஜே.எஸ்.சி படித்தவர் வெள்ளைக்கார முகாமைத்துவப் பள்ளியில் கட்டுப்பாட்டுடன் கற்ற வாத்தியாராய் உயர்ந்தார். கல்விப் பணிக்காக இலங்கையின் தெற்குப் பகுதிகாலியில் 1958ல் கடமையாற்றும் போது அந்தத் துயரச் சம்பவம் நடந்தது.

திருவாளர் பண்டார நாயகா பிரதமராய் இருந்த வேளை வாகனங்களில் ஆங்கில எழுத்துகளுக்குப் பதிலாக சிங்கள சிறீ – எழுத்தை இலக்கத்தகடுகளில் பதிக்கவேண்டுமென சிங்கள அரசால் சட்டம் அமுல் செய்யப்பட்டது. இதை அன்றைய தமிழ்பேசும் தலைவர்களும், மக்களும் எதிர்த்தனர். இதனால் சிங்களப் பேரினவாதிகள் தமிழ் மக்களக்கெதிராக நாடளாவிய வன்முறையைத் தூண்டிவிட்டனர். விளைவு பல தமிழர்கள் துன்புறுத்தப்பட்டு உடமைகள் பறிக்கப்பட்டு உயிரும் பறிக்கப்பட்டனர்.

காலி நகர்ப் பகுதியில் ஒரு தமிழ்ப் பள்ளியில் இந்திய தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு வாத்தியாராய் சங்கரன் இருந்தார். சைமன் என்னும் சிங்கள இளைஞன் தான் இவருக்கு சமையல்காரன், தோட்டக்காரன், காவல்காரன், எல்லாமே.

வாத்தியார் வட மராட்சிக்கு வரும் போதெல்லாம் பனங்கிழங்கு, வள்ளிக் கிழங்கு, நல்ல மாம்பழங்கள் எல்லாம் இவனுடைய குடும்பத்திற்கு கொண்டு வந்து கொடுப்பார். அப்போதெல்லாம் மிக நன்றியுடன் வாங்கி அவன் குடும்பம் சாப்பிட்டு புகழ்ந்து மகிழும். வாத்தியார் அவனை வேலைக்காரனாக பார்க்கவில்லை. தன் மகனைப்போல் பராமரித்தார்.

அந்த ஐம்பத்தெட்டு கலவரத்தில் அப்பகுதியில் வன்முறைக்குத் தலைமை தாங்கியவன் சைமனின் மைத்துனன், புத்த மதத்தினர். அகிம்சை போதிப்பவனின் புதல்வர்கள், தனது மைத்துனன் ஒரு தமிழனின் நிழலில் வாழ்வதை அந்த வன்முறைக்கும்பல் தலைவன் விரும்பவில்லை துவேசத்தனமாக தன் மைத்துனன் சைமனிடம் தமிழனை எதிரியாக வர்ணித்தான். தங்களுடைய எதிரிகள் அவர்கள்தான் என்று எடுத்துச் சொன்னதன் விளைவு பகுத்தறிவும் பக்குவமும் அற்ற சைமன் வாத்தியாரை வாளால் வெட்டிக்கொன்றான். பொருட்களை கொள்ளையடித்தனர் மைத்துனன் குழுவினர்.

சைமனின் பெற்றோர் இது கேட்டு குமுறினர் என்ன செய்ய கொடிகட்டிப் பறக்கும் துவேசச் சுறாவளியில் யார் தப்பமுடியும். காவல்துறை மூலம் தகவல் கிடைத்ததும் தகனம் அங்கே. கிரியைகள் இங்கே. ஒய்வூதியம் மூன்று பெண்களையும் கரை சேர்க்க முடியுமா? அந்தக் காலகட்டத்தில் சீதனப்பெருஞ் சுவர்கள் மிகவும் வலுவாகக் கட்டப்பட்டு இருந்தது, தமிழ் ஈழப்பகுதிகளில் தலை மன்னார் இராமேசுவரக் கப்பல் ஓடிக்கொண்டிருந்த வேளை. இந்தியா செல்லும் தளப்பயணிகளாய் கடவுச் சீட்டுப் பெற்று சங்கரி ஆச்சி தமிழ் நாடு சென்று வரத் தொடங்கினாள். இந்தியாவின் பட்டுச் சேலைகள், அலங்காரப் பொருட்கள், கம்பளங்கள் இலங்கையில் பெரும் மதிப்பைப் பெற்று இருந்தது. அதில் கணிசமான

www.tamilarangam.net



வருமானம். ஆச்சி இந்தியா செல்ல தலை மன்னாருக்கு முன் கூட்டியே வந்து விடுவார். சுங்கப் பரிசோதனை முடிந்ததோ இல்லையோ "தம்பி கப்பல் எப்போ வரும்? என்று வினவ ஆரம்பித்துவிடுவார்.

மூத்தமகள் யுவராணி கொழும்பில் ஒரு பொறியியலாளருக்குத் திருமணம் செய்து கொடுக்கப்பட்டார். 1976ம் ஆண்டு தை மாத முகூர்த்தத்தில் விமரிசையாக திருமணம் நடந்தேறியது. சீதனம் விரலுக்குத் தகுந்த வீக்கம் போல வழங்கப்பட்டது.

1977ம் ஆண்டு சிறீலங்கா குடியரசு அதிபராக வீற்றிருந்து ஆண்டு வந்தார். திரு. ஜெயவர்த்னே. விடுதலைப் போராட்டம் முனைப்பெய்வதைத் தடுக்க தனது சகலகலா மூளையைப் பயன்படுத்தினார் வன் செயல் தலை விரித்தாடிய போது வானொலியில் "போர் என்றால் போர் சமாதனாம் என்றால் சமதானம்" என்று குரல் கொடுக்க, இனத்தீ எங்கனும் பரவியதை மறக்க முடியாது. அந்த இனக்கலவரத்தில் கொழும்பில் பாதிக்கப்பட்டு தனது மகளும் மருமகனும் காங்கேசன் துறைக்கு உள்நாட்டிலேயே 'லங்காராணி' எனும் கப்பலில் ஏற்றப்பட்டு அகதிகளாக அனுப்பப்பட்டனர். இந்தத் தகவல் அறிந்ததும் சங்கரி ஆச்சி "எடேய் தம்பி எப்போ வரும் கப்பல்? என் பிள்ளையும் மருமகனும் எப்ப வருவினம்டா" என்று கேட்டார்.

1983 வெலிக்கடைச் சிறைச்சாலை படுகொலைகள் தாராளமாக செய்யப்பட்டபோது செய்தி அறிந்து "எப்போ வரும் கப்பல்" என்று சங்கரி ஆச்சி கேட்டவர்தான்.

காலச் சக்கரத்தின் ஓட்டத்தில் முல்லைத்தீவு என்னும் வன்னிப்பகுதியில் விவசாய நிலத்தை வாங்கி பெரும் பண்ணை ஆரம்பித்தார். சங்கரி ஆச்சி மிகவும் தாக்குப் பிடித்து 1989ம் ஆண்டு இலங்கை இராணுவத்தின் கெடுபிடிகளால் தமிழ் நாட்டிற்கு அகதிகளாய் வந்து சேர்ந்தார். அவர் வியாபாரத்திற்கு கப்பலில் கடந்த கடலை விசைப்படகில் இரவோடிரவாக கடக்கும்போது விம்மியழுதார் சங்கரி ஆச்சி. ராமேசுவரத்தில் அகதிகளாய் வரவேற்கப்பட்டு 'ரயிலில் பயணம் செய்து அந்த முகாமில் தஞ்சம் புகுந்த ஓராண்டில் இராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டதும் வரவேற்புகளும், வாழ்த்துகளும் வசைகளாக மாறின. நெருக்கடிகள், கெடுபிடிகள் எல்லாம் சூழ்ந்தன. சலுகைகள் குறைந்தன. அனுதாபிகள் உறவினரை இன்னொரு முகாம் சென்று பார்க்கசென்ற சங்கரி ஆச்சியின் இளையமகள் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டார்.

அவர் மூன்று மாதங்களின் பின்னர் பல்வேறு முயற்சிகள், பல கடிதங்கள் மன்றாட்டங்களின் பின் விடுவிக்கப்பட்டார். சங்கரி ஆச்சிக்கு அகதி வாழ்க்கை அலுப்புத் தட்டிவிட்டது என்றோ!

சந்திரிகா அம்மையார் அதிபரானதும் அமைதிச் சூழ்நிலை திரும்பி விடும் என்ற நோக்கில் தாமாக விருப்பம் தெரிவித்து படிவங்கள் நிரப்பி கொடுத்துவிட்டு இன்றும் கேட்கிறார் சங்கரி ஆச்சி "எப்போ வரும் கப்பல்"?

**தரன்**

(நன்றி : தமிழ் அகதிகள்)

---

## இயேசு சிறப்பு முகாமில்

ஓ! இயேசுவே
மீண்டும் பூலோகம்
வர எண்ணாதே
வந்தாலும்
ஈழத்தமிழ் அகதியாக
இந்தியா வந்து விடாதே!

ஏனெனில்
கடந்த முறை
சிலுவையில் மட்டுமே
அறையப்பட்டாய்
இம்முறை
அதைவிடக் கொடிய
சிறப்பு முகாமில்
அடைக்கப்படுவாய்

**சந்திரன்**
**சிறப்பு முகாம்**

## தமிழா சிரித்து மகிழ்ந்திடு

தமிழா உனக்குத் தலைத் தீபாவளி
ஈழத்தமிழனுக்கோ
தலை போகின்ற தீபாவளி
சிவகாசி வெடியில் நீ
சிரித்து மகிழ்ந்திருக்க
அமெரிக்க சீனா கனரக ஆயுத
வெடிகளில் ஈழத்தமிழனின்
தலைகள் வெடித்திருக்கும்
சிங்கள இராணுவம் சிரித்திருக்கும்
தமிழா நீயுமொரு
தீபாவளி வாழ்த்தனுப்பி
சிறிலங்காவோடு
சிரித்து மகிழ்ந்திடு

நன்றி 'தமிழ் அகதிகள்'
அகதிகள் முகாம் – தமிழ்நாடு


www.tamilarangam.net



# தினமணி எழுதுமா ? மனிதவுரிமை அமைப்புகள் பேசுமா ?

தமிழீழ அகதிக் குழந்தைகளின் இந்தப்படம் மிகப்பிரபல்யமானது. 1997–தை மாதம் தமிழ்நாட்டின் முக்கிய தினசரிப் பத்திரிகையான 'தினமணி'யில் தலைப்பு படமும், செய்தியும் தமிழ் அகதிக் குழந்தைகள் பற்றியது, கர்நாடக மாநிலத் தலைநகர் பெங்களூரில் உள்ள ஜக்கூரில் உள்ள 230 தமிழ் அகதிக் குழந்தைகளின் படம், ENDLF இயக ன் முக்கிய பிரமுகரான 'ராஜரத்தினம்' "பிரைட் சொசைட்டி" என்று தொண்டு நிறுவனத்தை (NGOS) ஏற்படுத்தினார்.

அகதிகளுக்காக மத்தியரசின் உதவி கிடைப்பதில்லை எனக் கூறி 1995ல் கர்நாடக அரசு பண உதவியை நிறுத்தியது. பள்ளி நிர்வாகிகள் அரசிடம் முறையிட்டனர். பள்ளிக்கு பக்கமான கடைகளில் கடன் வாங்கி ஒரு வேளையாவது ஒழுங்காக வயிற்றுக்கு குரக்கன்மா கஞ்சி ஊத்தினர், எல்லாக் குழந்தைகளுக்கும் படிக்க புத்தகம் இல்லை 5 மாணவர் 1 புத்தகத்தை படித்தனர், சில வகுப்புக்களில் ஆசிரியர்களுக்கு மட்டும் புத்தகம் இருந்தது அகதிக் குழந்தைகள் உணவின்றி, நல்ல மாற்று



*கர்நாடகாவின் 'இந்திராகாந்தி சர்வதேசப் பள்ளியில்' அகதிமாணவரர்களின் எதிர்காலம் ?*

"மெஸ்கா" என்ற தொண்டு நிறுவனத்தின் கட்டிடத்தில் அகதிக்குழந்தை களுக்கான பள்ளிக்கூடத்தை தொடக்கினார். 1990ல் தமிழ்நாட்டு அகதி முகாம்களிலுள்ள ஆயிரக்கணக்கான அகதிக் குழந்தைகளில் 250 வரையிலான குழந்தைகளை மட்டும் தனியாக கூட்டிச்சென்று 1ம் வகுப்பு முதல் 10ம் வகுப்புவரை கல்வி கற்றுக் கொடுத்தது. "பிரைட் சொசைட்டி" இலங்கையர். இந்தியர் என 9 ஆசிரியர்கள், குழந்தைகளின் கல்விச் செலவு, பராமரிப்பு செலவு என மாதத்துக்கு 45000/– வீதம் பள்ளி நடந்துவந்தது. 1994ல் நிதி நெருக்கடியில் குழந்தைகள் பட்டினி கிடக்க நேரிட்டது. கர்நாடக அரசு குழந்தைகளின் கல்வி, பராமரிப்பு செலவு என மாதம் 41000/– வீதம் கொடுத்தது.

உடையின்றி ஒழுங்கான கல்வி இன்றி புகைப்படத்துக்கு காட்சி தருகின்றனர்.

தமிழ்நாட்டில் இருக்கும்போது இக் குழந்தைகளுக்கு தமிழ் நாட்டு அரசின் 'உதவிப்படி' கிடைத்துவந்தது. கர்நாடக மாநிலம் சென்றபின் அவ்வுதவிப்படிவை நிறுத்திவிட்டது. கர்நாடகா கொடுத்துவந்த உதவிப்படியும் மத்தியரசைக் காட்டி நிறுத்திவிட்டது. இரக்க குணமுடையோர் இந்த தமிழ் அகதிக் குழந்தைகளுக்கு உதவமாட்டார்களா? 'தினமணி' வாசகர்களை கேட்டது, எழுதியது.

தமிழீழ அகதிகள் மேல், குழந்தைக் கல்வி மீது உணவின்றி வாடும் பாலகர் பால் அக்கறை கொண்ட தமிழர்கள், சனநாயகசக்திகள் தினமும் தினமணி அகதிக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குழந்தைகள் நிதிசேர்ப்புக்கு 50 முதல் – 5000 வரை என நிதியளித்தனர். தினமணி தினமும் நிதிவழங்கும் இரக்க குணமுடையோர் பெயரையும். உதவித் தொகையையும் பத்திரிகையில் வெளியிட்டுவந்தது. கலைஞர் முதல் சில மடலாயங்கள் வரை பணம் கொடுத்தன. சில குழந்தைகளுக்கு ஓராண்டுக்கு உணவு கொடுப்பதாக உறுதியளித்தன. பெங்களூர் தமிழர்கள் சிலர் நேரடியாக முகாமுக்கு சென்று பணமும், பொருளும் கொடுத்து உதவினர்.

தமிழ்நாட்டில் முகாமுக்கு வெளியிலுள்ள வசதி படைத்த தமிழீழத்தவர்களும், அய்ரோப்பிய, அமெரிக்க நாடுகளில் இருந்து இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் செய்த தமிழீழத் தனவான்களும் கூட நிதியளித்து உதவினர், அடுத்த நாள் தின மணியை கட்டாயம் வாங்கிப்படித்தனர்.

தமிழீழப் போராளி இயக்கங்களுக்கு ஆதரவு அரசியல் இயக்கங்களும், தமிழ்நாட்டு அரசும் நிதி திரட்டி கொடுத்தது. இந்திய மத்தியரசு போராளிகளுக்கு பணமும் பயிற்சியும் வழங்கியது இரகசியமானதல்ல. தமிழீழ அகதிகளின் நலனுக்காக, அகதிக் குழந்தைகளுக்காக வெளிப்படையாக, தமிழ் மக்களிடம் கிட்டத்தட்ட 6 இலட்சம் நிதி திரட்டியது இதுதான் முதன் முறையாக இருக்கும், தமிழ்நாட்டு மக்களின் அகதிகள் ஆதரவு உணர்வு எவ்வளவு வலிமையானது என்பதற்கு அத்தாட்சி வேறு என்னவேண்டும். தமிழீழ அகதிகள் தஞ்சம் அடைந்துள்ள நாட்டு மக்களின் உளப்பூர்வமான உதவிகளை சரியான வகையில் பயன்படுத்தவேண்டியது அகதிகளின் கடமை.

வெளிப்படையாக, நல்லதொரு முயற்சியாக அகதிக் குழந்தைகளின் துன்பத்தை – துயரத்தை எடுத்துக்காட்டி, தமிழ்நாட்டு மக்களின் அகதி ஆதரவு உணர்வு மூலம் இலட்சக்கணக்கான நிதியை சேகரித்தது தினமணி.

நிதி சேகரிப்பின் போது அக்குவேறு ஆணிவேறாக வெளிப்படையாக தினமும் கணக்குக்காட்டிய தினமணி. திரட்டிய மொத்த நிதி எவ்வாறு. எதன் அடிப்படையில், யார் ஊடாக அகதிக் குழந்தைகளுக்கு செலவழிக்கின்றது என்பதை தினமணியில் வெளிப்படையாக பிரசுரிக்க வேண்டும் என நிதி வழங்கியவர்களும், அகதிகளும் எதிர்பார்க்கிறார்கள்.

நாம் எல்லோரும் இறுதியில் கவனிக்க வேண்டிய முக்கியவிடயம். இந்தியாவில் உள்ள தமிழீழ அகதிகளில் முகாம்களும் – முகாம்களுக்கு வெளியில் வாழ்பவர்களில் 100க்கு 99% ஆன அகதிகள் தமிழ்நாட்டில் தான் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள் இது மத்திய – மாநில அரசுகளின் கொள்கைமுடிவு. ஆனால் 1% ஆன தமிழீழ அகதிகள் மட்டும் வெளிமாநிலங்களில் ஏன் தங்கவைக்கப் பட்டிருக்கிறார்கள். இதன் தேவையும் மர்மமும் என்ன? 10 ஆயிரக்கணக்கான அகதிக் குழந்தைகளில் 250 குழந்தைகள் மட்டும் கல்வி கொடுப்பது என்ற பெயரில் கர்நாடக மாநிலத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்? லட்சக்கணக்கான அகதிகளில் ஓர் ஆயிரம் அகதிகள் மட்டும் ஒரிசா மாநிலத்தில் தங்கவைக்கப் பட்டுள்ளதன் சூழ்ச்சிதான் என்ன? கண்காணாதா தூரத்தில் வெளிமாநிலத்தில் உள்ள அகதிகளுக்கும், குழந்தைகளுக்கும் ஏதாவது ஒன்று நடந்தால் நாம் எப்படி அறிவது – உதவுவது இதற்கான பதிலை மத்திய – மாநில அரசுகள் வெளியிடவேண்டும். இந்த 1% ஆன தமிழீழ அகதிகளையும் தமிழ்நாட்டுக்குள் கொண்டுவர அகதி நலன் பேணும் அமைப்புக்கள் முயலவேண்டும். அகதி ஆதரவு, மனிதவுரிமை அமைப்புகள் பத்திரிகைகள் இதற்கு உதவவேண்டும்.

**தினமணி இதற்கு முன்முயற்சி எடுத்து எழுதுமா?**

**இதை அகதி ஆதரவு, மனிதவுரிமை அமைப்புகள் பேசுமா?**

**நிர்மலா**
உயர்கல்வி மாணவி
(தமிழ்நாடு)

## புலம் பெயர்ந்த புதிய தேடல்கள்.......

சிறிலங்கா சிங்கள பௌத்த பேரினவாத அரசுகளின் (U.N.P., S.L.F.P.) இன அடக்குமுறை யுத்தமானது தமிழீழ மக்களை உலகம் முழுவதும் அகதிகளாக புலம் பெயரவைத்துள்ளது. உயிர்பாதுகாப்பு தேடி தமிழீழப் பகுதிகளிலும் கொழும்பிலும், நாட்டிற்கு வெளியே இந்தியாவில் தமிழ் நாட்டிலும் மேற்கு ஐரோப்பா, இங்கிலாந்து, கனடா, ஆஸ்ரேலியா, ஸ்கன்டினேவிய நாடுகள், தாய்லாந்து போன்ற இன்னும் பல நாடுகளில் அகதிகளாகவும், வேலை தேடி ஆப்பிரிக்கா, மற்றும் வளைகுடா நாடுகளிலும் அல்லல்படும் தமிழர்களின் கண்ணீர்க் கதைகள் சொல்லிமாளாது. இருண்டு போன, நிரந்தரமற்ற தமது எதிர்கால வாழ்வை எண்ணி ஊமைகளாக வாழ்பவர்கள் ஒருபுறம், போராட்டமே வாழ்வின் விதி என்ற உண்மையை உணர்ந்து கொண்டவர்கள் மறுபுறம் புதிய சிந்தனைகள் கருத்துக்களை நோக்கி முன்னேறிக் கொண்டிருப்பதையும் காணலாம்.

இன்று பரவலாக புலம் பெயர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும் அகதிகள் மத்தியில் இருந்து வாழ்வின் இருப்பைத் தேடி பல படைப்புக்கள் நாவல்கள், சஞ்சிகைகள், நாடகங்கள், திரைப்படங்கள், பத்திரிகைகள் வாயிலாக வெளிவருகின்றன. ஆனால் இவற்றில் பல தனி நபர்களின் பிரச்சனைகளையும் விளம்பரப்படுத்தல்களையுமே கொண்டுள்ளது. அனைத்து மக்களின் பிரச்சனைகளையும் கவனத்தில் கொள்ளாது, அதற்கான போராட்டங்களை முன்தள்ள முடியாதவைகளாகவே உள்ளன.

அதிலும் குறிப்பிடும்படியாக சில பத்திரிகைகள் எமக்குக் கிடைத்தன. இலங்கையில் இருந்து வெளிவரும் **'அகதி'** என்ற சஞ்சிகை முஸ்லீம் மக்களின் நிலைப்பாடுகள் பற்றியும் ஓரளவு தெளிவாக கூறுகின்றனர். முஸ்லீம் மக்கள் தமது இருப்பை தாமே தீர்மானிக்கும் சக்திகளாக மாற வேண்டும் என்ற கருத்துப் போக்கும் உருவாகி வருகின்றது-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அதே போல் இந்தியாவில் தமிழ்நாட்டில் உள்ள அகதி முகாம் ஒன்றில் இருந்து **'தமிழ் அகதி'** என்ற கையெழுத்துப் பிரதியும் வந்து கொண்டிருக்கிறது. அகதிகள் முகாமின் பலவேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் இருந்து ஒரு கையெழுத்துப் பிரிதியைக் கொண்டு வருவது என்பது சிரமமான காரியமே. தமிழீழ அகதிகளின், நலனில் அக்கறை கொண்ட 'தமிழ் அகதிகள்' பத்திரிகை தொடர்ந்து வெளிவர வேண்டும். அகதிகள் முகாமில் உள்ள இளைய தலைமுறையினர் இதில் பங்கு கொண்டு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கவேண்டும். தாம் வாழும் நாடுகளில் உள்ள தமிழீழ அகதிகள் தமது நாளாந்தப் பிரச்சனைகளுக்கு அந்நாடுகளின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு தமது கோரிக்கைகளை வலியுறுத்தி வென்றெக்கவேண்டும்.

அதே வேளை தமிழீழ அகதிகள் தமது அகதி வாழ்வை முடிவுக்கு கொண்டுவர, மீண்டும் நாடு திரும்ப, சுதந்திரமாக வாழ என்ன வழிமுறைகளைக் கையாள வேண்டும் ? என்பதைப் பற்றி அகதி மக்களுக்கு விழிப்புணர்வு ஊட்டப்பட வேண்டும். **'எண்ணெய்ச் சட்டியில் இருந்து அடுப்பில் விழுந்த மீனின்'** கதையாக அகதிகள் நிலை மாறக் கூடாது. நாம் வாழும் நாடுகளில் கரைந்து போகாமலும், அந்நாடுகளின் தீண்டத்தகாத இன்னுமொரு சாதியாக மாறாமலும் இருக்க நாடு திரும்புவதே ஒரே வழி. அகதி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்பட வழி செய்வது, அகதிகள் மத்தியில் வாழும் சனநாயக சக்திகளின் இன்றைய கடமையாகும்.

**'தமிழ் அகதிகள்'** சஞ்சிகையின் சில ஆக்கங்கள் அகதியின் குரலில் மறுபிரசும் செய்யப்படுகின்றது •

# "ஈனத்தொழில்"

**ஆசிரியர் செ. கணேசலிங்கன்**

## அகதி நாவல் ஒரு அறிமுகம்

இலங்கையில் கடந்த 14 ஆண்டுகளாக ஈழத் தமிழர்களுக்கு எதிராக சிறீலங்கா அரசு கட்டவிழ்த்து விட்டுள்ள இனவாத யுத்தமானது அம் மக்களை தாம் வாழும் பகுதிகளில் இருந்து புலம் பெயர வைத்து அகதிளாக அவதியுறும் நிலைக்குத் தள்ளியுள்ளது. இனவாத யுத்தத்தின் உச்சக் கட்டம் 1995 கார்த்திகையில் குடாநாட்டை விட்டு 40 மணி நேரத்தில் 4 இலட்சத்திற்கும் அதிகமான மக்களைப் புலம் பெயர வைத்துள்ளது. இன்று வரை அம்மக்கள் தம் சொந்த பகுதிக்கு திரும்பி செல்ல முடியாமலும் புலம் பெயர்ந்த பகுதிகளில் வாழ்வதற்கும் விடாது. சிறிலங்கா அரசும் இராணுவமும் அவர்களுக்கு மிக மோசமான நெருக்கடிகளை கொடுத்து வருகின்றது.

அகதிகளாக குடிபெயர்ந்து அல்லல்படும் நம்மக்களின் வாழ்வையும் துன்ப துயரங்களையும் அன்றாடப் பிரச்சனைகளையும் மையமாக கொண்டு **'ஈனத்தொழில்'** என்ற பெயரில் ஒரு நாவலை திரு. செ. கணேசலிங்கன் எழுதியுள்ளார். 1995 கார்த்திகையில் தொடங்கிய யுத்தம் யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சிக்கும், வன்னிக்கும், கொழும்புக்கும், மன்னாருக்கும் இராமேஸ்வரத்திற்கும் என உயிர்ப்பாதுகாப்பு தேடி அலையும் மக்களின் நிலையையும் சிறிலங்கா அரசும் அதன் கூலிப்படைகளும் கொடுத்துவரும் நெருக்கடிகளையும் கொடுமைகளையும் கூறுவதாக நாவல் அமைந்துள்ளது. குறிப்பாக சிறீலங்கா அரசும் ஆளும் வர்க்கமும் இராணுவத்தையும் பொலீசையும் கொண்டு தமிழர்கள் மேல் நடத்தும் இனப்படுகொலையை **ஈனத்தனமான செயல்** என கூறுகின்றனர். சிறீலங்கா அரசின் இந்த ஈனச் செயலைப் பார்த்தும் கூட சர்வதேச சமுதாயம் வாய்மூடி மௌனமாக இருப்பதைக் கண்டு நாவலாசிரியர் ஆதங்கப்படுவதும் கவலைப்படுவதும் ஆங்காங்கே வெளிப்படுகின்றது.

இலங்கையில் U.N.P., S.L.F.P. கட்சிகள் இனவாத அரசுகளாக தம்மை நிலை நிறுத்திக் கொண்டதில் இருந்து இன்றுவரை இனவாத வன்முறைகளும் யுத்தங்களும் தமிழீழத் தமிழர்களை மட்டுமல்லாது தமிழ் பேசும் முஸ்லீம், மற்றும் மலையக தோட்டத் தொழிலாளர்களையும் அகதிகளாக புலம் பெயர வைத்த வரலாறுகளும் உண்டு. அதற்கான பதிவுகளும் பலவுண்டு 1977, 1983களில் கொழும்பில் இருந்து தமிழர்கள் யாழ்ப்பாணத்திற்கும் திருகோணமலைக்கும் அகதிகளாக கப்பலில் வந்திறங்கினர். 1977இல் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு 'லங்கா ராணி' என்ற கப்பல் மூலமாகவே அகதிகள் வந்தனர். இதை மையமாக வைத்து அப்போது 'அருளரால்' **'லங்கா ராணி'** என்ற பெயரில் ஒரு நாவல் கொண்டுவரப்பட்டது. அகதி மக்களின் வாழ்வையும் துன்ப துயரங்களையும் பற்றி பல்வேறு காலங்களிலும் பல பதிவுகள், கலை இலக்கிய வடிவங்கள் தோன்றினாலும் ஈழத்தில் இருந்து மிக அரிதாகவே இவை வெளி வருகின்றன. இது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

ஆனாலும் இதனை ஓரளவு திரு. கணேசலிங்கன் அவர்கள் செய்து வருகின்றனர். முற்போக்கு பெண்ணிய கருத்துக்களையும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் குறிப்பான சூழல்களையும் தனது எழுத்துக்கள் மூலம் பதிவு செய்துவரும் திரு. கணேசலிங்கன் **'ஈனத்தொழில்'** நாவல் மூலம் இலங்கையில் அகதிகளின் இன்றைய நிலையை தெளிவாக கூறியுள்ளார். அகதிகளாகிய எம்மாலும், புலம் பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர்கள் மேல் அக்கறை கொண்ட அனைவராலும் படிக்கப்பட வேண்டிய நாவலாகும்.

**சோபா**

www.tamilarangam.net





அகதிகளுக்காக கட்டப்பட்ட வீடுகள்...

பசும்பொன் மாவட்டத்தில்...

# அகதிகள் பெயரில் அதிகாரிகள் விட்ட ஏப்பம்!

"விதிகளை எல்லாம் காற்றில் எறிந்துவிட்டு அகதிகளுக்காக ஒதுக்கப்பட்ட பணத்தை அதிகாரிகளே பங்கு போட்டுள்ளனர்!"

ஒவ்வொரு ஆண்டும் தமிழகத்தின் தஞ்சம் புகுந்துள்ள இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்காக தமிழக அரசு கணிசமான ஒரு தொகையை ஒதுக்கீடு செய்கிறது. அந்த வகையில் 1995-96-ம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டில் பசும்பொன் மாவட்டத்தில் 435 வீடுகள் கட்டிமுடிப்பதற்காக ஐம்பது லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

அகதிகளுக்கு வீடுகட்டும் திட்டப்படி முதலில் அகதிகளின் லிஸ்ட் தயாரிக்கப்பட்டு வீடு கட்டுவதற்கான இடத்தை யார் யாருக்கு வீடு கட்டப்பட வேண்டுமோ அவர்களின் பெயரிலேயே வாங்கிப் பத்திரப்பதிவு செய்ய வேண்டும். இதற்காக முதல் கட்டமாக, ஆயிரம் ரூபாய் வீதம் அகதிகளிடமே கொடுக்கப்படும். அதைக் கொண்டு இடம் வாங்கப்பட்ட பிறகு அடுத்த கட்டமாக 2,500 ரூபாய் கொடுக்கப்படும். அதைக் கொண்டு வீட்டுக்கான பேஸ்மட்டம் போட்ட பிறகு, அடுத்தகட்டமாகச் சுற்றுச்சுவர் மேல்கூரை அமைப்பதற்குக் கடைசித் தவணையாக 6,500 ரூபாய் கொடுக்கப்படும்.

இந்தப் பணமாவது மாவட்ட கலெக்டருக்கு நேரடியாகக் கொடுக்கப்பட்டாலும் ஒவ்வொரு முறையும் பணப்பட்டுவாடா செய்யும்போது சம்பந்தப்பட்ட தாலூகாவைச் சேர்ந்த தாசில்தார் அந்த வீடுகள் முறையாகக் கட்டப்படுகின்றனவா என்று பார்வையிட்டு ஆர்.டி.ஓ-வுக்கு ரிப்போர்ட் அனுப்ப வேண்டும். பிறகே அடுத்த கட்டத் தொகையை வழங்க ஆர்.டி.ஓ. உத்தரவிடுவார்! அதுவும் அந்தந்த அகதிகளிடம் தனித்தனியாக... வழங்க வேண்டும் என்பது விதி.

ஆனால், இந்த விதிகளையெல்லாம் காற்றில் எறிந்துவிட்டு அகதிகளுக்காக ஒதுக்கப்பட்ட பணத்தை அதிகாரிகளே பங்கு போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.


இதன்படி காரைக்குடி தாலூகாவுக்கு உட்பட்ட பாதரக்குடி என்ற கிராமத்துக்கு அருகே சுமார் மூன்று ஏக்கர் பரப்பளவுள்ள இடத்தை காண்டிராக்டர்கள் சிலரை வைத்து ஏக்கருக்கு முப்பதாயிரம் ரூபாய் விலை கொடுத்து கமுக்கமாக வாங்கியிருக்கிறார்கள். இதுதான் ஊழலின் முதல் கட்டம். அடுத்த கட்டமாக கையெழுத்துப்போட்டு பணம் வாங்குவதற்காக அகதிகளைத் தேட ஆரம்பித்தபோது தற்போது கழனிவாசல் கிராம வி.ஏ.ஓ-வாக இருக்கும்



வலுவற்ற அடித்தளம்...

www.tamilarangam.net






**ராமச்சந்திரன் என்பவர் துணைக்கு வந்திருக்கிறார்.**

அகதிகளை தேட ஆரம்பித்தபோது துணைக்கு வந்த ராமச்சந்திரன் தன்னுடைய கழனிவாசல் கிராமத்தில் வசிக்கிற சிலரை 'அகதிகள்' என்று சர்டிபிகெட் கொடுத்தார். இதைத் தொடர்ந்து ராமச்சந்திரன் அகதிகளாக அடையாளம் காட்டிய நபர்களின் பேரில் முதல்கட்டமாக நபரொன்றுக்கு ரூ.1000 வீதம் வழங்கியிருக்கிறார்கள்.

அந்த வகையில் பட்டுவாடா செய்யப்பட்ட 4,35,000 ரூபாயில் ஏற்கனவே வீடுகட்ட இடம் கொடுத்த நபர்களுக்கு மட்டும் பேசிய தொகையில் பாதியை கொடுத்துவிட்டு மீதிப் பணத்தை அதிகாரிகளே சுருட்டிக் கொண்டிருக்கிறார்கள். இதன் பிறகு அப்போதைய பசும்பொன் மாவட்ட கலெக்டராக இருந்த ஷண்முகத்தின் நண்பரான கதிரேசன் என்ற காண்ட்ராக்டரிடம் வீடுகட்டும் பணி ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இதைத் தொடர்ந்து சுமார் 24 வீடுகளுக்கு மட்டும் பேஸ் மட்டம் போட்டுவிட்டு, அடுத்தகட்ட பணத்திற்கு கைநீட்டியிருக்கிறார் கதிரேசன். உடனே 435 வீடுகளுக்கு உண்டான இரண்டாம் கட்ட தொகை ரிலீஸ் ஆயிருக்கிறது. இந்தப் பணத்தையும் அகதிகளாகச் சொல்லப்பட்டவர்கள் பேயரில் அதிகாரிகளே எடுத்திருக்கிறார்கள். இதில் ஒரு சிறிய தொகையைக் கொண்டு அந்த 24 வீடுகளையும் கட்டி முடித்த கதிரேசன், மூன்றாவது தவணைக்காக அதிகாரிகளை அணுகியபோது தயக்கமின்றி 435 வீடுகளுக்குமுண்டான 3-ம் கட்ட தவணைத் தொகையும் வழங்கப்பட்டிருக்கிறது. இப்படி 435 வீடுகளுக்குமுண்டான 43,50,000 கடந்த ஆண்டு ஜூன் மாதத்துக்குள் ரிலீஸ் செய்யப்பட்டுவிட்டது. ஆனால் வீடுகள் 24 மட்டுமே கட்டிமுடிக்கப்பட்டிருக்கின்றன. இந்த நிலையில் 50,00,00 ரூபாய் ஒதுக்கீட்டில் மீதமுள்ள 6.5 லட்சம் ரூபாயை எடுப்பதற்கான முயற்சியில் அதிகாரிகள் ஈடுபட்டிருக்கிறார்கள்.

நன்றி - ஜூனியர் விகடன்

**மானகிரி கிராமத்தில் இலங்கை அகதிகளுக்கு வீடுகள் கட்டாமலேயே பணம் முழுவதும் ஏப்பம் விட்டதற்கு உடந்தையாக இருந்ததற்காக இவரைக் காப்பாற்ற எண்ணுகிறாரா? காரைக்குடி நகரில் உள்ள ஊரணி, கண்மாய், பாதை, தடை விதிக்கப்பட்ட சர்க்கார் இடங்களுக்கு இவர் வழங்கியுள்ள பட்டா பாஸ் புத்தகங்களுக்கு இவர் உடந்தையாக இருக்கிறாரா?' - இப்படிப் போகிறது! அதில் கூறப்பட்டுள்ள விவரங்களை விசாரித்துப் பார்த்தோம்.**

**"ராமச்சந்திரன் தன்னுடைய கண்ட்ரோலில் உள்ள கழனிவாசல் கிராமத்தில் இருக்கிற அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்களை ஏக்கர்கணக்கில் தனியாருக்கு பட்டா போட்டுக் கொடுத்ததன் மூலம் ஏராளமான நன்மைகளை அடைந்திருக்கிறார். 'பட்டா போட்டுத் தருகிறேன்'**

www.tamilarangam.net



# அரேபிய வேலை வாய்ப்பா ? அல்லது அகதி மக்களுக்கு கொள்ளி வைப்பா ?

ஈழப்பபிரச்சனையால் நிலை குலைந்து தமிழ்நாட்டில் தஞ்சம் புகுந்தோம் அகதிகளாக. பல லட்சம் மக்கள் வடக்கு கிழக்கில் வாழும் நிலையற்று எத்தனையோ இடர்பாடுகளை எதிர்கொண்டு வாழ்கிறார்கள். நாம் தப்பித்தோம் பிழைத்தோம் என்று வந்து இந்தத் தமிழ் நாட்டில் அகதிகளாக வாழ்கிறோம்.

ஆனால் அகதி முகாம்களில் வாழும் பெண்கள், தரகர்களின் ஆசை வார்த்தைகளை நம்பி வருந்தத்தக்க நிலைகளில் அரேபிய நாட்டு வேலை வாய்ப்பின் மூலம் அங்குள்ள செல்வத்தை அள்ளி கொண்டு வந்து விடலாமென்ற ஆசை வார்த்தைகளை நம்பி அரேபிய நாட்டுக்கு கூட்டிச் செல்லப்படுகின்றனர்.

நமது நாட்டில் உரிமையிழந்து, பொருளிழந்து, உடல் ஊனமுற்று, மன ஊனமுற்று இங்கு தமிழ் நாட்டில் தஞ்சம் புகுந்து, தருகின்ற உதவிப் பணத்தில் கெடுபிடிச் சுதந்திர வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். இங்கே பற்றாக்குறையென்பது வெளிப்படையான ஒன்று. வெள்ளையனின் காலனித்துவ ஆசை வார்த்தைகள் போல் இங்கு ஒரு நவீன அடிமைத்தனம் நடைபெறுகின்றது.

"என்ன உங்க வீட்ல யாரும்" ஹவுஸ்மேட்டாக சவுதிக்குப் போக விருப்பமா? 'பாஸ்போர்ட்' 'கீஸ்போர்ட்' எல்லாம் ரெடியாக்கி அனுப்பலாம். போன பிளைட்ல கூட பன்னிரெண்டு பேர் போய்ட்டாங்க. அதுக்கு முன்தின பேஜ்ஜில போனவங்க வீடுகளுக்கு பத்தாயிரம் அனுப்பிட்டாங்க. ஒரு மூனாயிரத்தை ரெடி பண்ணுங்க. மிச்சத்தை தவனை முறையில தாங்க".

ஆசை வார்த்தைகளை அழகாக அள்ளி வீச, ஏற்கனவே எல்லாவற்றையும் இழந்து போன நம் அகதி மக்கள் கனவில் அரபு நாடுகளில் மிதப்பார்கள். விளைவு ஏற்கனவே அகதி மக்களில் வசதி படைத்த ஒரு சிலர் நூற்றுக்கு பத்து வட்டி என்ற வீதத்தில் ஆயிரங்களை எண்ணிக் கொடுக்க தயாராகி விடுவார்கள். இவர்களை அறிமுகப்படுத்துவதும் சிபாரிசு செய்வதும் தரகர்கள் தான். தரகர்கள் இவ்விதம் செயல்படும்போது மக்கள் நெஞ்சுருகிவிடுவார்கள்.

அடுத்து என்ன ஸ்டூடியோவில் போட்டோக்கள் அடுத்த நாள் சென்னை.. பாஸ்போர்ட் தயாராகிவிடும். போதாக்குறைக்கு காதில், கழுத்தில் உள்ளவை மற்றும் பெறுமதியான வீட்டுப் பொருட்கள் விற்பனையாகிவிடும். இந்த சந்தர்ப்பத்தில் தரகருக்கு கணிசமான தொகை கிடைத்துவிடும்.

அண்ணே "என்ற மனுசி வெளிநாட்டுக்குப் போகப்போறா... என் புள்ளைக்கு சுகமில்லைன்னு டாக்டர்கிட்ட போக பணம் கேட்டபோது அஞ்சு ரூபா வைச்சுக்கிட்டு இல்லேன்னு சொன்னவனெல்லாம் எங்ககிட்ட வர்ரகாலம் வரப்போவுது" என்று சொல்ல.

மனைவியோ "இந்த நாலு பொம்பிளப் பிள்ளைகள வைச்சுக் கொண்டு என்ன செய்யிறது. கடனக்கப்பியப்பட்டு போனாத்தானே ஆகும். வரும்போது மூட்டையைக் கட்டிக் கிட்டாவந்தோம். வேலை வெட்டிக்கு தூரம் தொலைவிற்கு போக ஏலாது. போலீசுக்குப் பயப்படனும் என்ன செய்ய நம்ம விதி. நாலு காசு இருந்தா தான் நலலாயிருக்கலாம். "அக்கா! நான் போய்ட்டா, வீட்டுக்காரர் குடிச்சுப்போட்டு பிள்ளைகளை அடிப்பார். நீங்க தான் ஆறுதல் சொல்லனும்" என்று பக்கத்து வீட்டுப் பெண்ணிடம் சொல்வார்.

இப்படி அரபு நாட்டு ஆசைகள் ஆழப்பதிந்து விட்டதன் காரணமென்ன? அன்று ஏகாதிபத்தியவாதிகளான பிரித்தானியர் தமிழக மக்களை அவர்களின் வறுமையைப் பயன்படுத்தி அடிமைகளாக்கி கங்காணி தலைமையில் இலங்கை, மலேசியா, பர்மா போன்ற நாடுகளுக்கு தேயிலை, ரப்பர் கோப்பித் தோட்டங்களில் வேலை செய்ய அழைத்து சென்றனர். இது வரலாறு. அப்படி அழைத்துச் செல்லப்பட்டவர்களின் பிள்ளைகள், பேரன்கள், உறவினர்கள் இன்று இந்தத் தமிழ்நாட்டு மண்ணில் அகதிகள் என்ற பெயரில் வாழ்கின்றார்கள் என்பதும் உண்மை.

ராஜீவ் காந்தி அவர்களின் கொலைக்குப்பின் அகதிகள் மேல் ஏற்பட்டுள்ள வெறுப்பு நிலை காரணமாக கவனிக்கப்படுவதிலும் மந்த நிலை. ஆரம்பத்தில் அளிக்கப்பட்ட மருத்துவ உதவிகள் தடைப்பட்டது. பற்றாக்குறைகளால் கூலி வேலைக்கோ பிற வேலைகளுக்கோ செல்வது பாதுகாப்பு காரணம் காட்டி மட்டுப்படுத்தப்பட்டது. சில அகதி முகாம்களில் குறுக்குவழி உழைப்புகளால் தீய சக்திகளுடன் தொடர்புபட்ட மக்களின் செயல்களால், பாதிப்புற்றவர்கள் இவ்விதம் வெளிநாட்டு வேலை வாய்ப்பு எனும் மாயையில் விழுகின்றனர்.

இவர்கள் இதனை அடைய எத்தனை அலைச்சல்?
R.I.-யைப் பார்க்கவேண்டும்.
தாசில்தாரரைப் பார்க்கவேண்டும்.
காவல் துறையினரைப் பார்க்கவேண்டும்.
Q பிரிவு போலீசாரிடம் அனுமதி பெறவேண்டும்.

மாவட்ட ஆட்சியரை (கலெக்டர்) பார்க்கவேண்டும். எத்தனை கொடுக்கவேண்டும். இவ்வளவு பேரையும் பார்த்து பின்பு இவர்களின் தரகர்களாக முகாமில் உள்ள ஒரு சிலரையும் கவனிக்கவேண்டும். பின்பு விமான பயணச்சீட்டு, விசா, திகதி மாற்றல் இத்தியாதி அலைச்சல், இத்தனை அலைச்சல் பட்டுத்தான் திருச்சியிலிருந்து கொழும்புக்கு விமானம் ஏறவேண்டும்.

இவ்வளவு இன்னல்பட்டு கொழும்பு ஏஜன்சியிடம் தங்கி வெளிநாடு சென்று ஒரு கணிசமான தொகையை அவர்களுக்கு அனுப்பவேண்டும். மத்திய கிழக்கு நாடுகளுக்கு புறப்பட்டுச் சென்றவுடன் படும் வேதனையைச் சொல்லவும் வேண்டுமா?

www.tamilarangam.net



'பஹ்ரானில்' சென்று அங்குள்ள முகவர்கள் மூலம் வீட்டுப் பணிப் பெண்களாய் அரபு நாடுகளில் அமர்த்தப்படுகின்றனர். சில நல்ல அரேபியர்கள் பணிப் பெண்களின் சம்பளப் பணத்தை அனுப்ப உதவுகின்றனர். பல ஏமாற்றுக்கார எசமானர்களும் பித்தலாட்டக்காரர்களும் பணத்தை அனுப்பிவிடுவதாக கூறி ஆண்டுக் கணக்கில் அனுப்பாமல் விடுவதும் உண்டு.

அரேபிய நாடுகளில் பணிப்பெண்களாக வேலை செய்யும் போது பருவநிலை மாற்றத்தால் நகக் கண்களில் இருந்து இரத்தம் கசியும் போதும் பாத்திரங்கள் கழுவித்தான் ஆகவேண்டும். சமையல் செய்து தான் ஆக வேண்டும். எந்த அகால நேரத்திலும் இட்ட வேலைகளைச் செய்துதான் ஆகவேண்டும்.

ஒரு சில நாட்களில் குறிப்பிட்ட நேரம்தான் உறங்கமுடியும் ஆசைகளைச் சுமந்து, கடன்களைச் சுமந்து வந்துவிட்டோமென்ற பெண்கள் தமது துன்பங்களையெல்லாம் கண்ணீராய் அரபிக் கடலில் விடுகின்றனர்.

அவர்களின் சின்னச்சின்ன ஆசைகளையும் சோகங்களையும் ஒலி நாடாவிலும், கடிதங்களிலும் திரட்டி அனுப்பும்போதும் கேட்கும் போதும் பார்க்கும்போதும் நெஞ்சம் நெகிழ்கின்றது.

இந்த அகதிப் பெண்கள் இவ்வளவு சிரமத்துக்கு மத்தியில் முகாம்களுக்கு பணம் அனுப்பும்போது ஒரு சில கணவன்மார்கள், தந்தைமார், உறவினர்கள் குடித்து கும்மாளமடித்தும் ஆடம்பரம் செய்வதும் தேவைதானா? அகதிகள் சேவையின் போர்வையிலும் பலர் வெளிநாடு செல்வதைப் பற்றி அடுத்த வருகையில் எழுதுகின்றோம். விபரம் தெரிந்தவர்கள் எழுதுங்கள். மத்திய கிழக்கு நாடுகளில் இலங்கையின் தமிழ், சிங்களப் பெண்கள் 78,000 பேர் வீட்டுப்பணிப் பெண்களாக மருத்துவ தாதிகளாக வேலை செய்கின்றனர்.

**– சுதர்சினி –**

சவுதி அரேபியா

(நன்றி – தமிழ் அகதிகள்)

## வேண்டும் விடுதலை!

ஓ...... ஈழத் தமிழினமே! உனக்கு
துன்பங்கள் என்ன தொடர்கதையா?....
தொல்லைகள் தான் உங்கள் வாழ்வின் எல்லைகளா?.....
இன்னல்கள் தான் உங்களின் இருப்பிடமா?....

ஒளியைத் தேடும் உங்கள் கண்களில்
வெளிச்சம் என்பது வெறும் பேச்சா?....
ஒற்றுமை வாழ்வு தேடும் உள்ளங்களே!...
உருவிழந்து தவிக்கும் உறவுகளே!

அமைதி தேடும் எமது வாழ்வினில்
அவலங்கள் தான் என்றும் அன்பளிப்பா?....
உரிமை கோரும் எங்கள் போராட்டம் என்ன!
உயிர்களை பலியிடும் பலிபீடமா?....

விடுதலை வேண்டிநிற்கும் வீரர்களே!
வேற்றுமையில் காலத்தை வீணே விரயம் செய்யாதீர்

ஈழம் தழைக்க வேண்டுமானால் இன்றே.....
எல்லோரும் ஒற்றுமையாக செயல்படுங்கள்
விரைவில் வேண்டும் விடுதலை வீரர்களே!
வேற்றுமையில் ஒன்றுமை கண்டு விரைந்து
சென்றிடுவோம் விடுதலை நோக்கி!

**-சுமதி-**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**தமிழ் அகதிகள் சர்வதேச இணைப்பு என்ற அமைப்பு டென்மார்க் நாட்டின் கொ்னிங் (Herring) நகரத்தில் தமிழ் அகதிகள் தொடர்பான கருத்தரங்கை ஆகஸ்ட் 97, 1, 2, 3, ஆகிய திகதிகளில் நடத்த அழைப்புவிட்டிருந்தது. இக்கருத்தரங்கிற்கு "ஈழ அகதிகள் உரிமைக்கழகம்" (EELAM REFUGEE RIGHTS ORGANISATION) அனுப்பிய அறிக்கை.**

இணைப்பாளர்
தமிழ் அகதிகள் சர்வதேச இணைப்பு,
டென்மார்க்.

அன்புடையீர்,

தங்களின் தமிழ் அகதிகள் தொடர்பான கருத்தரங்கு அழைப்பிதழ் கிடைக்கப் பெற்றோம். மிக்க மகிழ்ச்சி நாங்கள் இக்கருத்தரங்கில் நேரடியாக கலந்து கொள்ளமுடியாமல் இருப்பதற்கான காரணங்களை அறிவீர்கள். நேரடியான தொடர்பின்மை, காலதாமதமான அழைப்பிதழ், நமக்குள்ள பொருளாதார, மற்றும் எல்லைப்படுத்தப்பட்ட நிலைமைகளால் கலந்து கொள்ள முடியாமல் இருப்பது வேதனையான விடயம் இருந்தும் பிரேரணைகளை அனுப்புகின்றோம். இக்கருத்தரங்கில் படிக்குமாறும், கருத்தரங்குத் தீர்மானங்களை நிறைவேற்றும் போது நமது கோரிக்கைகளையும் கவனத்தில் கொள்ளும்படியும் கேட்டுக்கொள்கின்றோம்.

தமிழ் அகதிகள் பலநாடுகளிலும் புலம் பெயர்ந்து வாழ்கின்றனர். இதில் ஸ்கன்டினேவிய நாடுகளும் (டென்மார்க், நோர்வே, சுவீடன்) உள்ளடங்கும். தமிழ் அகதிகள் தாங்கள் வாழும் நாடுகளில் சட்டரீதியான அகதி அந்தஸ்து முதல் அகதி நலநிதி, தொழில், பாதுகாப்பு மற்றும் தமது மொழி, பண்பாட்டு உரிமைகளையும் தாய்நாட்டுச் செய்திகளை, சகோதர அகதிகளைப் பற்றிய செய்திகளை, தெரிந்து கொள்ளும் உரிமைகளை வாய்ப்புக்களை பெறுவதில் மிகப் பெரும் துன்பத்தை அனுபவிக்கின்றனர். அய்ரோப்பாவில் பல நாடுகளில் சட்டரீதியான அகதி அந்தஸ்த்து இல்லாததாலும், இந்தியாவில் பொய்க்குற்றங்களின் பேரிலும் நூற்றுக்கணக்கான அகதிகள் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். (போதைவஸ்து, கொலை, கொள்ளை காரணமாக சிறை வைக்கப்பட்டவர்களல்ல)

தமிழ் அகதிகள் பிரச்சனை குறித்து நடத்தப்படும் சர்வதேசக் கருத்தரங்கு இன்றைய சூழ்நிலையில் அவசியமான ஒரு முயற்சியாகும். தமிழ் – டானிஸ் (DTFA) நட்புறவுக் கழகம் 2,3–6–90இல் தொடங்கியது முதல் 92, 93, 94, 96 ஆம் ஆண்டுகளில் ஸ்கண்டிநேவிய தமிழ் அகதிகளுக்கு ஆதரவாக எடுத்த பாதுகாப்பு நடவடிக்கைகளும், சிறீலங்காவில் தமிழர்கள் மேல் நடத்தப்படும் சித்திரவதை, கொலை மற்றும் மனித உரிமை மீறல்களை வெளிப்படுத்திவரும் DTFA இன் முயற்சிகளை வரவேற்கின்றோம்.

சிறீலங்காவிலும், புலம் பெயர்ந்த நாடுகளில் உள்ள தமிழீழ அகதிகள் முகங்கொள்ளும் பிரச்சனைகளை ஆதாரச் செய்திகளைத் திரட்டுவது, தொடர்பு சாதனம் மூலம் வெளியிடுவது, தங்களால் முடிந்தளவு தாம் வாழும் நாடுகளில் உள்ள தமிழ் அகதிகளுக்கு நேரடியாகவும் – மறைமுகமாகவும், சட்டரீதியாகவும் உதவுது, எல்லா நாடுகளிலும் உள்ள தமிழீழ அகதிகள் மத்தியிலுள்ள நல்ல சக்திகளாலும், புலம் பெயர்ந்து வாழும் நாட்டு மக்கள் மத்தியிலுள்ள அகதிகள் ஆதரவாளர்களாலும் 1983 முதல் தொடர்ந்து செய்யப்பட்டு வருகின்றது. நாட்டுக்கு நாடும், காலத்துக்கு காலமும் இந்த அகதிகளுக்கான முன்முயற்சிகள் ஆதரவுகள் கூடியும் குறைந்தும் இருக்காம். ஆனால் எல்லாப் புலம் பெயர்ந்த நாடுகளிலும் அதற்கான வேர் இருக்கின்றது. மனிதர்கள் இருக்கும்வரை மனித நேயம் இருக்கும். மனிதநேயம் இருக்கும்வரை தமிழ் அகதிகளுக்கான ஆதரவும் இருக்கும்.

**உங்கள் முயற்சிகள் தொடர வாழ்த்துக்கள்.**

அமைப்புக்குழு,
'ஈழ அகதிகள் உரிமைக் கழகம்' – கனடா
**EELAM REFUGEE RIGHTS ORGANIZATION - CANADA**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



டென்மார்க் கருத்தரங்குக்கு அனுப்பிய அறிக்கை :

# தமிழ் அகதிகள் பிரச்சனையும் - தீர்வும்

சந்திரிகா அரசு ''யுத்தத்தை நிறுத்தி நாட்டுக்கு அமைதியையும், தமிழ் மக்களுக்கு சமாதானத்தையும்'' வழங்குகிறேன் என்ற முழக்கத்துடன் தேர்தலில் ஆட்சிக்கு வந்தது. பேச்சு வார்த்தை நாடகம் முடிந்த - முறிந்த கையுடன் தொடங்கிய யுத்தம், 15 வருட ஆட்சியில் U.N.P. அரசு நடத்திய இன ஒடுக்கு முறை யுத்தத்தையும் மீறியது. 1995, 96 இல் யாழ் மீதான 'சூரிய ஒளி' 1-2-3 இராணுவப் படையெடுப்புகளும் 97 வன்னி மீதான 'சத்யஜெய', 'ஜெயசிக்குரு' (வெற்றி நிச்சயம்) இராணுவப் படையெடுப்பும் இலட்சக்கணக்கான தமிழ் மக்களை உள்நாட்டிலேயே இடம் பெயரவைத்துள்ளது. 7000 மேலான மக்களை இந்தியாவிற்குள் ஓட வைத்துள்ளது. நூற்றுக்கணக்கான மக்களை கடலுக்கு இரையாக்கியுள்ளது. 'ஜெயசிக்குரு' படையெடுப்பு இரண்டு மாதங்களாகியும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. அரசின் கட்டுப்பாட்டில் உள்ள யாழ்ப்பாணத்தில் 600 பேருக்கும் மேல் காணாமல் போயுள்ளனர். அரசு கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் சிங்கள இராணுவத்தின் பொலீசின், தமிழ்க் கைக்கூலி படைகளின் தேடுதலும்-கைதும்-சித்திரவதையும்-பாலியல் பலாத்காரமும் கொலையும் எல்லை மீறிப் போய்க் கொண்டிருக்கின்றது.

சந்திரிகாவின் பொது ஜன முன்னணி அரசு (புலிப்பயங்கரவாதிகள்) தமிழ்ப் பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டு வருவதாகவும், தமிழ் மக்கள் விடுதலை செய்யப்பட்டு சுதந்திரக் காற்றை சுவாசிப்பதாகவும், விரைவில் அரசியல்த் தீர்வுமூலம் இனப்பிரச்சனையும் - பயங்கரவாதப் பிரச்சனையும் தீர்க்கப்படும் என ஒரு பிரச்சார யுத்தத்தையும் நடத்தி வருகின்றது. இந்தியா உட்பட உலக அரசுகள் எல்லாம் சந்திரிகா அரசின் இன ஒடுக்குமுறை யுத்தத்தையும் அகதிகள் வெளியேற்றத்தையும் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருப்பதன் மூலம் சிறீலங்கா அரசுக்கு மறைமுகமாக உதவுகின்றன. அமெரிக்கா, பாகிஸ்தான், இந்தியா தென்னாபிரிக்கா, இஸ்ரேல் போன்ற நாடுகள் யுத்த தளபாடங்களையும், இராணுவ பயிற்சிகளையும், யுத்த தேர்ச்சியான படையினரை சிறீலங்கா அரசுக்கு நேரடியாக கொடுத்து உதவுகின்றன. அய்ரோப்பிய கூட்டமைப்பும், உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கியும், ஜப்பானும் சிறீலங்கா அரசுக்கு தேவையான நிதிக் கடன்களைக் கொடுப்பதன் மூலம் பொருளாதாரச் சீர்குலைவில் இருந்து சிறீலங்கா அரசைக் காப்பாற்றுகின்றன. இராணுவச் செலவுக்கும் இராணுவ தளவாட கொள்வனவுக்கும் இக்கடன்கள் மூலம் கிடைக்கும் பணத்தை சிறீலங்கா அரசு பயன்படுத்த உதவிபுரிகின்றன.

சூரிய ஒளி இராணுவ ஆக்கிரமிப்பின் மூலம் யாழ்ப்பாணத்தை சிறீலங்கா அரசு கைப்பற்றியுள்ளது. இராணுவத்தின் அத்துமீறல்களை சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு உட்பட பல்வேறு அமைப்புகளும் சர்வதேச சமூகத்தின் முன்னால் வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றன. சிறீலங்கா அரசு தான் யாழ் மண்ணை மட்டும் (ஆக்கிரமிக்கவில்லை) மீட்கவில்லை மக்களையும் வென்றெடுத்துள்ளது என்பதைக் காட்ட இராணுவப்படையெடுப்பின் போது பெருநிலப்பரப்புக்கு இடம் பெயர்ந்த இலட்சக்கணக்கான தமிழ் மக்களை மீண்டும் யாழில் குடியேற்ற பல சலுகை மற்றும் கவர்ச்சித் திட்டங்களைக் காட்டி அழைக்கின்றது. உணவும் உறைவிடமும் இன்றி வன்னியிலும் கிளிநொச்சியிலும் பரிதவிக்கும் யாழ் மக்கள் "சொந்த வீட்டுக்கு - காணிக்கு செல்வது" என்ற ஒரு நிம்மதிப் பெருமூச்சுடன் யாழ்செல்கின்றனர். அரசும், சில தொண்டு நிறுவனங்களும் (N.G.O's) பெருநிலப்பரப்பிலுள்ள யாழ் மக்களுக்கு கொடுக்கப்படும் உதவிகளை குறைப்பதன் மூலமும் யாழில் உதவிகள் அதிகம் என்ற ஆசைகாட்டும் பிரச்சாரத்தை மற்றும் நடவடிக்கைகள் மூலம் மக்களுக்கு மனநிலை நிர்ப்பந்தத்தை கொடுக்கின்றன. மன்னாரிலும் திருகோணமலையில் இருந்தும் யாழ்ப்பாணத்துக்கு மக்களை ஏற்றிச் செல்லும் கப்பல்கள் விடப்படுகின்றன. 1996இல் வவுனியாவில் இருந்து யாழ் அரசு உத்தியோகத்தர்கள் விமானம் மூலம் யாழுக்கு அனுப்பியது. 97இல் கொழும்பிலுள்ள இடம் பெயர்ந்த யாழ்ப்பாண மாணவர்கள், ஆசிரியர்கள், வயோதிபர்கள் யாழ் செல்ல விமானம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சந்திரிகா அரசு தனது **'புனர்வாழ்வு புனரமைப்புத் துறை'** மூலம் இராணுவ ஆக்கிரமிப்பு செய்த யாழ்ப்பாணத்தில் யாழ் மக்களின் சிவில் சமூக வாழ்க்கை மீது அரசு அதிகாரத்தை மேலும் மேலும் கெட்டிப்படுத்த சதி நோக்கம் கொண்ட பல சமூக நலத் திட்டங்களை அறிமுகப்படுத்து கின்றது. இதற்காக சர்வதேச அரசுகளை, சமூக நல நிறுவனங்களை, அழைக்கின்றது. தன்னார்வ குழுக்களும் (V.O's) சர்வதேச அரசு சாரா நிறுவனங்களும் (INGO's) இதற்கு தயாராகி வருகின்றன. ஆஸ்ரேலியா, நெதர்லாந்து, ஜப்பான் போன்ற நாடுகள் யாழ் அபிவிருத்திக்கும் புனர் அமைப்பிற்கும் என பல கோடிகளைக் கொட்டத் தொடங்கியுள்ளன. நோர்வே அரசு யாழ் விவசாயிகளுக்கான கடன் உதவிக்காக 1 கோடியே 80 இலட்சத்தை (3,00,000$) சந்திரிகாவின் 96ம் ஆண்டுக் கோரிக்கைக்கு 97 ஆடியில் வழங்கியுள்ளது. இந்தியரசு 800 தொன் சீமெந்தும் தமிழ்நாடு அரசு 55 போக்குவரத்து பேரூந்துகளும் ஜப்பான் இலங்கைக்கு 9 கோடி ரூபாய் விவசாய கடன் வழங்கியுள்ளது. இதில் யாழ் விவசாயிகளுக்கு என 6, நான்கு சில்லு உழவு இயந்திரங்களும், 4, இரண்டு சில்லு உழவு இயந்திரங்களும் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. **அமெரிக்காவும் அய்ரோப்பிய நாடுகளும் புனர்வாழ்வு - புனரமைப்புக்கு வழங்கும் கடனுக்கு வட்டி வாங்குவதில்லை** என அறிவித்துள்ளன. யாழ் புனரமைப்புக்கு வழங்கியுள்ளன. இதைவிட நோர்வே — சிறீலங்கா அரசுகள் கூட்டாக நடத்திய யாழ் காரைநகர் **'சீநோர்'** தொழிற்சாலை மீண்டும் இயங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

சிறீலங்கா அரசு யாழில் இன ஒடுக்குமுறை யுத்தத்தை நடத்தி ஆக்கிரமித்து விட்டு, அகதிகளாக வெளியேற்றிவிட்டு இன்று வன்னி மீது அடுத்த இன ஒடுக்குமுறை யுத்தத்தை நடத்திக் கொண்டிருக்கின்றது. ஆயிரக்கணக்கான வன்னி மக்கள் அகதிகளாகிக் கொண்டிருக்கையில் யாழ் மக்களுக்கு, அகதிகளுக்கு புனர்வாழ்வும் புனரமைப்பும் செய்து சிறீலங்கா அரசின் ஒடுக்குமுறைக் கரங்களை பலப்படுத்தவும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யாழ்ப்பாணத்தை மீண்டும் அந்நிய நாடுகள் சுரண்டத் தொடங்குவதற்கான முன்னேற்பாடுகளை இவ்நாடுகளுடன் கூட்டுச்சேர்ந்து சிறீலங்கா அரசு செய்து கொண்டிருக்கின்றது. இந்த அரசுகள் ஏன் சிறீலங்கா அரசை யுத்த நிறுத்தம் செய்யுமாறு நிர்ப்பந்திப்பதில்லை, கோருவதில்லை, ஏன் யுத்த நிறுத்தம் ஏற்பட்டு இனப்பிரச்சனைக்கு வடக்கு–கிழக்கு பகுதிக்கு நியாயமான அரசியல் தீர்வு ஏற்படும் வரை வடக்கு–கிழக்கு பகுதிக்கு புனர் வாழ்வு – புரைமைப்பு அபிவிருத்திக்கு உதவி வழங்க மாட்டோம் எனக் கூறுவதில்லை. இந்நாடுகளிலுள்ள தமிழ் அகதி அமைப்புக்கள், ஆதரவு அமைப்புகள் ஏன் இது பற்றி பேசுவதில்லை?

அகதிகளுக்கு உதவும், அரசியல் தீர்வுக்கு அழுத்தம் கொடுக்கும் இந்த சர்வதேச நிதி நிறுவனங்களும், நடுநிலை நாடுகளும் (?) உண்மையில் சிறீலங்கா அரசின் இன ஒடுக்குமுறை யுத்தத்தை ஆதரிப்பவர்கள்தான். சந்திரிகா அரசின் மோசடி அரசியல் தீர்வு திட்டத்திற்கு ஆதரவு கொடுப்பவர்கள். அகதிகளின் பிரச்சனைக்கான அடிப்படைக் காரணத்தை, இன ஒடுக்குமுறை யுத்தத்தின் ஆணிவேரை மறைத்து, அகதிகளின் சமூக உணர்வை, அரசியல் உணர்வை மழுங்கடித்துக் கொண்டே, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட குறிப்பாக சிறீலங்கா அரசின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கும் அகதிகளுக்கும் புனர்வாழ்வு – புரைமைப்பு – அபிவிருத்தி செய்வது என்ற பெயரில் உதவிக் கொண்டு இன ஒடுக்குமுறை அரசின் உற்ற நண்பர்களாக உலாவருகின்றனர்.

ஆனால் அகதிகள் உருவாகக் காரணமான இனவாத அரசியலில் – அரசில், இன ஒடுக்குமுறை அரச பயங்கரவாதத்தில் மாற்றம் ஏற்படாத வரை, மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய அரசியல் தீர்வு வைக்கப்படாதவரை, யுத்த நிறுத்தம் ஏற்படாதவரை அகதிகள் பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு இல்லை என்பதை ஒவ்வொரு புலம் பெயர்ந்த நாடுகளிலுமுள்ள அகதிகளும் – அகதி அமைப்புக்களும் உணர்ந்து கொண்டுவருகிறார்கள்.

புலம் பெயர்ந்த நாட்டு அகதிகள் மத்தியில் அகதிகள் நலனுக்காக என்ற பெயரில் எல்லா நாடுகளிலும் அரசு சாராதொண்டு நிறுவனங்கள் (NGO's) இயங்கிக் கொண்டிருக்கின்றன. சில நாடுகளில் இயக்கங்களும் இயங்குகின்றன. தொண்டு நிறுவனங்களை பொறுத்தவரை, அகதி மக்கள் அந்தந்த நாடுகளில் முகங்கொள்ளும் அன்றாட வாழ்நிலைப் பிரச்சனைகள் சுகாதாரம், மருத்துவம், கல்வி, சுயதொழில் முயற்சி, ஊட்டச்சத்து போன்ற அகதிகளின் தினசரித் தேவைகளை அதுவும் 25% மான தேவைகளை வழங்குவதுடன், தமது நிறுவனங்களையும் தலைமைகளையும் பாதுகாத்து பலப்படுத்திக் கொள்கின்றன. தாம் வாழும் நாட்டு அரசின் அகதிகள் பற்றிய நிலைப்பாடுகளை அப்படியே அகதிகளிடம் பிரச்சாரம் செய்கின்றன. தமிழீழ மக்களின் பிரச்சனை – தீர்வு தொடர்பாக இவ்நிறுவனங்களுக்கு நிதி வழங்கும் நாடுகளின், சர்வதேச நிதி நிறுவனங்களின் நிலைப்பாட்டை சாதுரியமான முறையில் VO's, NGO's ஆகியன மக்கள் முன் வைக்கின்றன. தமிழீழ அகதிகளின் எதிர்காலம் குறித்தோ, நாடு திரும்ப யுத்த நிறுத்தம் முதல் நிபந்தனை, அரசியல் தீர்வு அடிப்படை பற்றியோ இவர்கள் மறந்தும் அகதிகள் மத்தியில் பேசுவதில்லை. மறுபக்கம் இயக்கங்களின் அகதிகள் பற்றிய பார்வை செயற்பாடு வெறுமனே சிறீலங்கா அரசு எதிர்ப்பு, அல்லது புலி எதிர்ப்பு என்ற அளவுடன் நிற்கின்றது. அரசின் இன ஒடுக்குமுறை யுத்தத்தை கண்டிப்பதிலும் தங்கள் இயக்கத்துக்கு ஆதரவு தேடுவதையும் ஆள்பிடிப்பதையும் செய்து கொண்டிருக்கின்றன. இவர்கள் அகதிகளின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான அந்நாட்டு அரசுகளின் உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான அக்கறைகூடக் காட்டுவதில்லை. அகதிகள் மத்தியில் அராஜக அணுகுமுறைகளை வெளிப்படுத்துவதுடன், அரசு சாரா தொண்டு நிறுவன அகதி அமைப்புக்களையும், சுயேட்சையான அகதி அமைப்புக்களையும் கூட பயமுறுத்தவும் செய்கின்றன.

எனவே உண்மையான மக்கள் நலன் சார்ந்த அகதி அமைப்புக்களின், ஆதரவாளர்களின் கடமை அந்தந்த புலம் பெயர்ந்த நாடுகளில் உள்ள அகதி மக்களின் வாழ்நிலைப் பிரச்சனைகளை அந்நாட்டு அரசுகளிடமும், ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான. மனிதவுரிமைக் கொமிசனிடமும் (UNHCR) எடுத்துச் சொல்லி வாழ, அந்நாட்டிடம் 'அகதி அந்தஸ்த்து'.கோரிப் பெற வேண்டும். அகதிகள் நாடு திரும்ப வேண்டிய அவசியத்தை வற்புறுத்தி யுத்த நிறுத்தம் ஏற்பட, அரசியல் தீர்வு உருவாக, சிறீலங்கா அரசை நிர்ப்பந்திக்கும்படி புலம் பெயர்ந்து வாழும் நாட்டு அரசுகளை நாம் வலியுறுத்தவேண்டும். சிறீலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்கும், படுகொலைக்கும், மனிதவுரிமை மீறல்களுக்கும் எதிராக அகதி மக்களை அந்தந்த நாடுகளில் ஒன்றிணைத்துப் போராடவேண்டும். யாழ்ப்பாணத்தில் இருந்து முஸ்லீம் மக்களைப் புலிகள் வெளியேற்றி சொந்த நாட்டில் அகதிகளாக்கியது போன்று, அப்பாவி மக்கள் மீதும் அகதிகள் மீதும் இயக்கங்கள் அராஜகமாக நடப்பின் அவற்றைக் கண்டித்து தவறுகளை நிறுத்தக் கோர வேண்டும். இச்சர்வதேச கருத்தரங்கு அகதிகள் பிரச்சனை மற்றும் தீர்வு குறித்து நமது கருத்துக்களை கவனத்தில் எடுக்கும் என நம்புகின்றோம்.

★ தமிழீழ அகதிகள் வாழும் நாடுகளில் அந்நாட்டு அரசுகளிடம் **'அகதி அந்தஸ்த்து'** கோருவது.

★ சிறீலங்கா அரசை யுத்த நிறுத்தம் செய்யும்படி வலியுறுத்துவது.

★ அரசியல் தீர்வுக்கு திம்புக் கோரிக்கைகளை அங்கீரிக்ககோருவது.

★ சிறீலங்கா அரசை நிர்பந்திக்குமாறு புலம்பெயர்ந்த நாட்டு அரசுகளிடம் கோருவது.

★ யுத்த நிறுத்தமும், அரசியல் தீர்வும், ஏற்படும் வரை அகதிகளை திருப்பி அனுப்பவதை தடுப்பது.

★ அரசியல் தீர்வு உருவாகும் வரை புனர்வாழ்வு, புனரமைப்பு பணிகளுக்கான உதவிகளை நிறுத்துமாறு உலக நாடுகளிடம் கோருவது.

★ அகதிகளுக்கான அடிப்படை உரிமைகளையும் வாழ்நிலைத் தேவைகளையும் வழங்குமாறு அவ்வவ் நாட்டு அரசுகளிடம் கோருவது.

★ அரசியல் தஞ்சம் கோருபவர்களை, சட்ட விரோத குடியேறிகள் என்ற பெயரில் சிறையில் உள்ளவர்களை விடுதலை செய்யகோருவது.

★ இக்கோரிக்கைகளை அங்கீகரிக்கும் அகதி அமைப்புக்கள், புலம் பெயர்ந்த நாட்டு சனநாயக அமைப்புக்களுடன் நட்புறவுகளை பேணுவது.

இப்படிக்கு
**கிளாரா**
**ஈழ அகதிகள் உரிமைக் கழகம் சார்பாக**
EELAM REFUGEE RIGHTS ORGANIZATION

www.tamilarangam.net



# ருவாண்டா அகதிகள்
# அம்பை நோவதா? எய்தவனை நோவதா?

பஞ்சம் பட்டினிச்சாவு, வறட்சி, இனமோதல், உள்நாட்டுச் சண்டை என்று வளம் கொழிக்கும் ஆபிரிக்க நாடுகள் நாளாந்தம் ஏராளமான மனித உயிர்களை பலியிட்டுக் கொண்டிருக்கின்றன. மேற்கு நாடுகளின் உடந்தையுடன் சனநாயக படுகொலைகளை, மனித உரிமை மீறல்களை தினமும் அரங்கேற்றிக் கொண்டிருக்கும் சர்வாதிகார அதிபர்கள், இராணுவ ஏதேச்சாதிகாரிகள் ஆபிரிக்க மக்களை, அவர்களின் சனநாயக உரிமைகளை, அதற்கான போராட்டங்களை துப்பாக்கி முனையில் தாக்கி அம்மக்களை மரணக் கடலில் தள்ளிக் கொண்டிருக்கின்றனர். ஆபிரிக்கக் கண்டத்தின் பெரும்பகுதி நாடுகளில் சனநாயகம் சிறிதளவும் இல்லை அல்லது பெயரளவில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. நைஜீரியாவின் சுற்று சூழல் இயக்க போராளி கென் சரோ விவா சதி வழக்கு ஒன்றில் தூக்கிலிடப்பட்டு கொல்லப்பட்டது. சனநாயகம் எந்தளவிற்கு ஏதேச்சதிகாரிகளால் கேலிக் கூத்தாக்கப்படுகின்றது என்பதற்கு அண்மைக் காலத்தின் குறிப்பிடத்தக்க உதாரணமாகும். ஆனால் இந்த பட்டியல் முடிவின்றி நீண்டு கொண்டே செல்கிறது என்பது தான் மனித நேயம் கொண்டவர்களுக்கு விடப்படும் சவாலாகும்.

ஆபிரிக்கா நாடுகள் பொதுவாகவே அபரிமிதமான இயற்கை வளத்தினை கொண்டிருக்கும் வளம் மிக்க பூமி. ஆனால் இந்த மண்ணின் மைந்தர்கள் தீராத வறுமைக்குள் வாழவும், சாகவும் நிந்திக்கப்பட்டிருக்கிறார்கள் அடிக்கடி பேரழிவுகளை சந்திக்க விடப்படுகிறார்கள். இவர்களுக்கு உரித்தான வளங்கள் இவர்களிடத்தில் இல்லை. சொந்த மண்ணில் அந்நியர்களுக்கும், அவர்களின் அடிவருடி ஆட்சியாளர்களுக்கும் அடிமைகளாய் வாழும் துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.

இத்தகைய பிரச்சனை பூமிகளில் ஒன்றான ருவாண்டா மனித கொடுமைகள் உச்சத்தை தொட்டு நிற்கும் ஒரு நாடாக தன்னை அடையாளப் படுத்திக்கொண்டுள்ளது. மூன்று ஆண்டுகளுக்குள் பத்து லட்சம் மக்கள் வெட்டிச் சாய்க்கப்பட்டனர். கொல்லப்பட்டவர்களில் பெரும்பகுதி மக்கள் ஒரு மாத காலத்துக்குள் அழிக்கப்பட்டனர்.

ருவாண்டாவில் கறுப்பின மக்கள் டூட்சி, ஹீட்டு என இரு இனக் குழுக்காளக வாழ்கின்றனர். டூட்சி இனத்தவர்கள் 500 ஆண்டுகளுக்கு முன் எதியோப்பியாவில் இருந்து வந்து குடியேறிவர்கள். சிறுபான்மையினரான டூட்சி இனம் மொத்த சனத்தொகையில் 9.8 வீதமாகவும், ஹீட்டு இனம் 89.8 வீதமாகவும் உள்ளனர். பொருளாதார ரீதியில் டூட்சி இனம் வசதிமிக்கவர்களாகவும், ஹீட்டு இனம் பின்தங்கிய நிலையிலும் இருப்பது இரு இன குழுக்களுக்குமிடையேயான முரண்பாடுகளில் ஒன்றாகும். ருவாண்டா, செயர், புருண்டி, உகாண்டா ஆதிய நாடுகளில் செல்வாக்கு உள்ளவர்களாக டூட்சி இனம் இருப்பது முரண்பாட்டின் அடுத்த முடிச்சாகும்.

1962ல் ருவாண்டா காலனியாதிக்கத்தில் இருந்து விடுதலை அடைந்த பின் இரு இனங்களுக்கும் இடையில் அதிகாரத்திற்கான போட்டியும், ஒருவரை ஒருவர் அழித்துக் கொள்வதும் தொடர்ந்து நடந்து வருகின்ற ஒரு விசயமாகும்.

ருவாண்டா மேலான பெல்ஜியத்தின் ஆதிக்கம் முடிவிற்கு வந்தபோது டூட்சி இனத்தவச் கையில் இருந்த அதிகாரம் ஹிட்டு இனத்திடம் மாற்றப்பட்டது. பெல்ஜியத்தை அடுத்து ருவாண்டாவை தனது காலனியாக்கிக் கொண்ட பிரான்ஸ் பெல்சியம் விட்டுசென்ற கொள்கைகளையே தீவிரமாக கடைப்பிடித்தது.

சகோதரர்களாக வாழ்ந்த இரு இனங்களும் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்ள ஆரம்பித்தது தற்செயலான ஒன்றல்ல. பெல்சியம், பிரான்ஸ் போன்ற நாடுகளின் காலனியக் கொள்கையின் பிரித்தாலும் சூழ்ச்சியின் விளைவாகவே இருந்தது. ஏனெனில் காலனி ஆதிக்கத்திற்கு முன்னர் இவ் இரு இனங்களுக்கும் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டிருக்கவில்லை. மாறாக இணக்கத்துடனேயே வாழ்ந்து வந்தனர். குறிப்பாக சுதந்திரத்திற்கு பின்புதான் இந்த வன்கொடுமை தலைதூக்கியது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1962ல் சுதந்திரம் அடைந்ததும் 20000 டுட்சி இனத்தவர் படுகொலை செய்யப்பட்டனர். 1972ல் நன்றாக படிக்கக்கூடிய மூன்று இலட்சம் ஹீட்டு இன மாணவர்கள் டுட்சி இனத்தால் படுகொலை செய்யப்பட்டனர். இது பெரும்பான்மை இனத்தவரான ஹீட்டு இனத்தவரை அதிகாரத்திற்கு வருவதை தடுக்கும் பொருட்டு கல்வித் துறையில் அவர்களை அடி நிலைக்கு தள்ளுவதற்கான படுகொலையாக இருந்தது.

ஏப்ரல் 1994ல் தொடங்கிய இனபடுகொலை தான் எல்லாவற்றையும் விட உச்ச நிலையில் இருந்தது. பத்து லட்சம் மக்களுக்கு மேல் கொல்லப்பட்டனர். ஏராளமான பெண்கள் விதவைகளானார்கள் இரண்டு லட்சத்திற்கும் கூடுதலான குழந்தைகள் அநாதைகள் ஆக்கப்பட்டனர். இருபது லட்சம் மக்கள் அண்டை நாடுகளிலும், சொந்த நாட்டிலும் அகதிகளாக தஞ்சமடைந்தனர்.

கொடூரமிக்க இப்படுகொலை நடந்து கொண்டிருந்த போது இன்னொரு நாட்டின் பிரச்சனையில் வரிந்து கட்டிக்கொண்டு தலையிடும் நாடுகள் இதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தன.

அகதிகளாக வெளியேறிய மக்கள் சந்தித்த அழிவுகள், அவலங்கள் நெஞ்சை உலுக்கும் பதிவுகளாக இருக்கின்றன. இம்மக்களின் அகதி வாழ்வு கண்ணீரால் நிறைந்தது, இரத்தத்தால் உறைந்துபோனது, மரணத்தால் சூழ்ந்தது. அகதிகளுக்கு புகலிடம் கிடையாமல் நாட்டுக்கு நாடு பல நூறு மைல்கள் கால் நடையாக அலைந்தனர். இந்த நடைப் பயணத்திலேயே பலநூறு பேர் கொல்லப்பட்டும், பட்டினி, நோயில் அழிந்தும் போயினர்.

'தஞ்சமடைந்த நாடுகளில் வாழ்ந்த அகதிகளில் பல முகாம்களுக்குள்ளேயே படுகொலை செய்யப்பட்டனர். கொல்லப்பட்டவர்களை அப்புறப்படுத்த யாரும் முன்வராததால் உயிர் தப்பியவர்கள் பல நாட்கள் அழுகிய பிணங்களுக்கு மத்தியில் தூங்கி எழுந்து, சமைத்து உண்டு மரண பயத்துடன் தமது நாட்களை எண்ணிக் கொண்டிருந்தனர். புகலிடம் கொடுத்த நாடுகளின் ராணுவத்தினர் நடத்திய துப்பாக்கி சூட்டில் இறந்தவர் பலர் உணவு, மருத்துவ உதவி, பாதுகாப்பான தங்குமிடம் இன்றி நாளொன்றுக்கு குறைந்தது 80–90 பேர் வீதம் மரணம் அடைந்தனர்.

புகலிடம் வழங்கிய நாடுகள் இந்த அகதி மக்களை பலாத்காரமாக வெளியேற்றினர். இவ்வாறு வெளியேறிய அகதிகளில் பலர் காணாமல் போய்விட்டனர். மிருகத்தையும் விட இழிநிலைக்கு ஒரு மனித சமூகம் ஆக்கப்பட்டிருக்கிறது என்றால் அவர்கள் கறுப்பு நிறத்தில் பிறந்து விட்டார்கள் என்பதற்காகவா...?

தஞ்சமடைந்த நாட்டு அரசுகள் அகதிகளே நிர்ப்பந்தித்து பலாத்காரமாக வெளியேற்றும்போது ஐ.நா.சபை மற்றும் NGO's, V.O's போன்ற நிறுவனங்கள் அவ் அரசுகளுக்கு உடந்தையாகவே இருந்தன. ஆனால் இந்த அகதி மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கும் படி உலக நாடுகளை ஐ.நா.வும் INGO's க்களும் நிர்ப்பந்தம் செய்திருந்தால் பட்டினியாலும், நோயினாலும் ஆயிரக்கணக்கான அகதிகள் இறந்து போனதை தடுத்திருக்க முடியும். இருந்தும் அவை அவ்வாறு செய்யவில்லை. ருவாண்டா மக்களின் வளத்தை சூறையாடி அம் மக்களின் பிரச்சனைக்கு மூல கர்த்தாக்களாக இருந்த பிரான்ஸ், பெல்ஜியம் நாடுகள் எவ்வித நிவாரண உதவிகளையும் வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எரிந்து கொண்டிருந்த பிரச்சனையில் எண்ணெய்யை ஊற்றிவிட்டன என்பதே யதார்த்தமாக இருந்தது.

ஒரு ஏழை நாட்டின் இரு சமூகங்கள் வாழ்வையும் ஆதாரத்தையும் இழந்து பஞ்சப் பரதேசிகளாக ஆக்கப்பட்ட பின்புதான் படுகொலைக்கு காரணமானவர்களை விசாரணை செய்வதற்கென்று சர்வதேச நீதிமன்றம் ஒன்றை ஐ.நா. சபை நிறுவியிருக்கிறது. இந்த மன்றம் யாரின் கழுத்திற்கு தூக்கு கயிற்றை போடப் போகிறது...? சர்வ தேச சதிகாரர்களுக்கா...? ருவாண்டாவின் இன வெறியர்களுக்கும், அவர்களுடன் சேர்ந்து இனவெறி பிரச்சாரத்தை கட்டவிழ்த்துவிட்ட ருவாண்டாவின் கத்தோலிக்க திருச்சபைக்குமா? அல்லது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் ருவாண்டாவின் பாதிக்கப்பட்ட அந்த மக்களுக்கா...? காலந்தான் இதற்கு பதில் சொல்ல வேண்டும்.

நன்கு திட்டமிட்டப்பட்ட மாபெரும் படுகொலையின் மூலமும் அதனைத் தொடர்ந்து அகதியாக்கப்பட்டபல லட்சம் மக்களின் இழப்புக்கள் மூலமும் பின் தங்கிய அந்த சமூகம் கொடிய சமூகச் சீரழிவுகளை சந்திக்க வேண்டிய நிலையில் தங்கள் மண்ணில் சனநாயக மறுமலர்ச்சிக்காக குரல் கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அம்பை நோவதா? எய்தவனை நோவதா? என்பதுதான் இன்று அந்த மக்கள் உடனடியாக விடைக்கான வேண்டிய கேள்வி.

**- செழியன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழ்நாட்டில் அகதி மாணவர்களின் இன்றைய நிலை

1983இல் யுத்தம் ஆரம்பமானதில் இருந்து இன்றுவரை தமிழீழ மக்கள் அகதிகளாக தமிழ்நாட்டிற்குள் வருவதும் பேச்சுவார்த்தை கள், ஒப்பந்துங்கள் ஏற்படும் போது நாட்டின் நிலைமை சீரடையும் என்ற நம்பிக்கையில் திரும்பிப் போவதும் மீண்டும் யுத்தம் ஆரம்பமானவுடன் திரும்பி வருவதுமாக ஒரு நிரந்தரமற்ற வாழ்வைக் கொண்டுள்ளனர். இதனால் இவ் அகதி மக்களின் பிள்ளைகளின் கல்வியும் ஒரு ஒழுங்கற்ற நிலையிலேயே உள்ளது. பெரும்பான்மையான குழந்தைகள் கல்வியை இங்கும் தொடரமுடியாது அங்கும் தொடரமுடியாது "இரண்டும் கெட்டான்" நிலையில் உள்ளனர். கிட்டத்தட்ட மொத்த அகதிமுகாம்களில் உள்ள பிள்ளைகளில் முகாம்களிற்கு உள்ளே இருக்கும் பெற்றோர்களின் பொருளாதார நெருக்கடி பிள்ளைகளை மாநில அரசுப் பள்ளிகளுக்கே அனுப்ப முடியவில்லை. பிள்ளைகளை கூலி வேலைக்கு அனுப்புவதன் மூலம் முழுக்குடும்பத்தின் பொருளாதாரத்தில் பங்கு கொள்ள வைக்கப்படுகின்றார்கள். படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை கூட 1990இல் 100 சதவீதம் ,இருந்து 1997இல் 60 சதவீதமாக குறைந்துள்ளது என்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

1983இல் இருந்து 1990 வரையும் தமிழ் மாநில அரசு தமிழ் அகதிமாணவர்களுக்கு கல்விக்கான வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்தியிருந்தது. ஆரம்பக்கல்வி தொடக்கம் பட்டப் படிப்பு வரை



பள்ளிக்குச் செல்வதா? வேலைக்குச் செல்வதா? கஞ்சித்தட்டுடன் கலங்கும் மாணவர்கள்

70 வீதமானோர் பள்ளிக்கூட வாசலைத் தானும் தொடாதவர்களாக உள்ளனர். ஓரளவு வசதிபடைத்தவர்கள், வெளிநாடுகளில் இருந்து பணவசதிகளைப் பெறுபவர்கள், எல்லாம் முகாம்களிற்கு வெளியே தங்கி, நன்கொடை கொடுத்து, தனியார் ஆங்கிலப் பள்ளிகளில் பிள்ளைகளைப் படிக்க வைக்கின்றார்கள். ஒதுக்கீடுகள் மூலம் பல மாணவர்கள் பயனடைந்தார்கள். 1991இல் ராஜீவ் படுகொலைக்குப்பின் ஆட்சிக்குவந்த ஜெயலலிதா தலைமையிலான அதி.மு.க. அரசு இலங்கைத் தமிழ் மாணவர்களின் பட்டப்படிப்புகளைத் தடை செய்தது. 1990இல் உயர்கல்வி பரீட்சை எழுதிய மாணவர்கள் 1991ம் ஆண்டுக்கான பட்டப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



படிப்புக்கு செல்ல முடியாது போயினர். இந்நிலை 5 வருடங்கள் நீடித்தது. 1996இல் அடுத்து ஆட்சிக்கு வந்த கருணாநிதி தலைமையிலான தி.மு.க. அரசு மீண்டும் பட்டப்படிப்புக்கான அனுமதியை வழங்கியுள்ளது. ஆரம்பக்கல்வி தொடக்கம் உயர்கல்விக்கும் தமிழகத்தின் எந்தப் பகுதிக்கும் சென்று படிப்பை தொடர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 20 பேருக்கு கலை, விஞ்ஞானம், மருத்துவம், பொறியியல், வணிகம் என அனைத்துத் துறைகளிலும் படிப்பதற்கு ஒதுக்கீடு செய்துள்ளது தி.மு.க. அரசு. ஆனால் அ.தி.மு.க. அரசு ஆட்சியில் இருக்கும் போது தங்கி இருக்கும் முகாம் பகுதியை விட வேறு எந்தப் பகுதிக்கும் சென்று படிக்க அனுமதியளிக்கப் படவில்லை. ஆனால் தற்போது புதிதாக அகதிகள் வந்து கொண்டிருப்பதால் ஏற்கனவே 6-7 வருடங்களாக ஒரே முகாமில் இருக்கும் அகதிக் குடும்பங்கள் பிரிக்கப்பட்டு வேறு வேறு முகாம்களுக்கு மாற்றப்பட்டுக் கொண்டிருக் கிறார்கள். அடிக்கடி இவ்வாறு தமிழ்நாட்டுள்ளும் இடங்கள் மாற்றப்படுவதால் குழந்தைகளின் கல்வி பாதிக்கப்படுவதாக அநேகமான பெற்றோர்கள் கவலைப்படுகின்றனர்.

இந்திய மத்திய மாநில அரசுகள் மாணவர்களுக்கு பள்ளிக்கூட அனுமதியைத் தவிர கல்விக்கான வேறு எந்த உதவிகளையும் செய்வதில்லை. 1990 வரையும் தமிழ்நாட்டில் உள்ள வெவ்வேறு தொண்டு நிறுவனங்களும் (NGO'S) அகதிமுகாம்களில் வேலை செய்யும் போது மாணவர்களுக்கு சீருடை, எழுதுகோல், பேனா, புத்தகங்கள், அப்பியாசப் புத்தகங்கள் (Note Books) மற்றும் அத்தியாவசியப் பொருட்களையும் கொடுத்துதவின. 1991க்குப் பின் எல்லா அமைப்புகளுக்கும் முகாம்களுக்குள் வருவதற்கு தடை செய்யப்பட்டன. சந்திரகாசன் தலைமையிலான "ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகம்" (OFFER) மட்டுமே அன்றுமுதல் இன்று வரை ஏகபோக நிறுவனமாக அகதிகள் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. ஏனைய தொண்டு நிறுவனங்களை முகாம்களிற்குள் வரவிடாமல் தடுப்பதிலும் உறுதியாகவுள்ளது. இதைவிட JRS (Jesuit Refugee Service South Asia) என்ற தொண்டு நிறுவனமும் மாணவர்களுக்கு பல உதவிகளைச் செய்கின்றது. அகதிமுகாம்களில் இயங்குகிறது.

கும்மிடிப்பூண்டி, வாழவந்தான் கோட்டை, மண்டபம் ஆகிய முகாம்களுக்குப் பக்கத்தில் அரச பாடசாலைகள் இல்லாதபடியால் முகாம்களுக் குள்ளேயே மாநில அரசு பாடசாலைகளை நடத்துகின்றது. இங்கு 1 முதல் 10ம் வகுப்புகள் வரை உண்டு. தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்களும் அகதிமுகாமைச் சேர்ந்தவர்களும் இங்கு ஆசிரியர்களாக உள்ளனர். தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு மாநில அரசு ஊதியம் வழங்குகின்றது. முகாமைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு JRS மாத உதவித்தொகை 250 ரூபா வழங்குகின்றது.

அனைத்து அகதி முகாம்களிலும் JRS உம். OFFER உம் பாலர் வகுப்புக்களை நடத்துகின்றன. 1ம், 2ம் வகுப்புக்கள் மட்டுமே இங்கு நடைபெறும். மாணவர்களுக்கு தேவையான உபகரணங்களும் வழங்கப்படுகின்றது. OFFER நடாத்தும் பள்ளியின் ஆசிரியர்களுக்கு 150 - 200 ரூபா வரை உதவித் தொகையும் JRS நடாத்தும் பள்ளியின் ஆசிரியர்களுக்கு 400 ரூபா வரை உதவித்தொகையும் வழங்கப்படுகிறது. இத்துடன் OFFER 6,7,8,9,10ம் வகுப்புகளுக்கு மாலை நேர போதனா மையம் ஒன்றையும் நடாத்துகின்றது. உயர்கல்வி மாணவர்களுக்கும் இரண்டு அமைப்புகளும் சில உதவிகளைச் செய்கின்றன. OFFER நடாத்தும் மாலைப் போதனா மையத்தை தனது உயர்கல்விக்கு அவர்களிடம் உதவி பெறும் மாணவர் நடாத்தினால் அம்மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்படாது. முகாமில் உள்ள வேறு யாராவது நடாத்தினால் அவருக்கு 250 ரூபா உதவித்தொகை வழங்கப்படும். 9,10,11,12 மற்றும் பட்டப்படிப்பு, தொழிற்கல்வி பயிலும் மாணவர்களுக்கு இரண்டு அமைப்புக்களும் அப்பியாசப் புத்தகங்கள், சிறு உதவித் தொகை, பரீட்சைக் கட்டணம் என்பனவற்றைக் கொடுத்து உதவுகின்றனர். இந்த மாணவர்கள் முகாமில் இந்த அமைப்புகளுக்கு வேலை செய்தால் மட்டுமே கொடுத்து உதவுகின்றனர். அதுவும் ஒரு சிறு பகுதி மட்டுமே. தேவையான காலத்தில் வழங்காது இழுத்தடித்து காலம் தாழ்த்தியே இதுவும் வழங்கப்படும். எல்லா முகாம்களிலும் உள்ள படிக்கும் மாணவர்களுக்கு இரண்டு அமைப்புகளும் கூட்டாகவே அப்பியாசப் புத்தகங்களை வழங்குகின்றன. OFFER ஆல் வழங்கப்படும் பொருட்களில் ஒரு பகுதி முகாமில் உள்ள அவர்களின் தலைவர்களால் மாணவர் களைச் சேர்வதில்லை. முகாம்களிற்கான விளையாட்டு உபகரணங்கள் கூட வெளிக் கடைகளில் விற்கப்படுவதை அறியமுடிகிறது. OFFER ஆல் பட்டப்படிப்பு மாணவர்களுக்கு 3 ஆண்டுகளுக்கு 6000 ரூபா மட்டுமே வழங்கப்படுகின்றது. அதுவும் மாதம் 300 ரூபா ஏழை மாணவர்களுக்கும் ஓரளவு வசதி உள்ளவர்களுக்கு 150 ரூபா வீதம் வழங்கப்படுகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இதைவிட இவ்ஆண்டு கருணாநிதி அரசால் வழங்கப்பட்ட 20 பேருக்கான பட்டப்படிப்புக்கான ஒதுக்கீட்டில், அனைத்து முகாம்களிலும் இருந்து 3 பேர் மட்டும் தெரிவாகியுள்ளனர். மீதிப் 17 பேரும் முகாமிற்கு வெளியே தங்கிப்படிக்கும் மாணவர்களில் இருந்து தெரிவு செய்யப் பட்டுள்ளனர். மொத்தம் 10 மாணவர்கள் +2 (A/L) பரிட்சை எழுதி 3 பேர் மட்டுமே தெரிவு செய்யப்பட்டுள்ளனர். 2 பேர் மருத்துவம், ஒருவர் பொறியியலுக்கும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தெற்காசியாவிலேயே இலங்கையில்த்தான் 90 சதவீதமானவர்கள் கல்வியறிவு பெற்றவர்கள் என்றும் அதிலும் பெண்கள் 65 சதவீதத்திற்கு மேல் கல்வியறிவு பெற்றவர்கள் எனப்பெருமைப்படும் நாம் இன்று படிப்பறிவற்ற ஒரு சமூகம் உருவாகிக் கொண்டிருப்பதை எம் கண்முன்னே காண்கின்றோம். அகதி முகாம்களில் தமிழ்நாடு அரசால் வழங்கப்படும் மாதாந்த உதவித் தொகையை பெறுவதற்கு கூட கையெழுத்து போடத் தெரியாத பலநூறு பேர் உள்ளனர். இலங்கையில் இருக்கும் போது கட்டாய இலவசக் கல்வியும், வேலை வாய்ப்புக்கு சர்வ அவசியம் என்ற சமூகச் சூழலும் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்ப வேண்டிய தேவை பெற்றோருக்கு இருந்தது. யுத்தமும், அந்நிய நாட்டில் நிரந்தரமற்ற அகதி வாழ்க்கையும் வாழுகின்ற சூழலும் பொருளாதார நெருக்கடிகளும் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பும் அக்கறையற்றவர்களாக பெற்றோரும், பிள்ளைகளுக்கு படிப்பின் மீது நாட்டமின்மையும் காணப்படுகின்றது. மேலும் தமிழ்நாட்டிலுள்ள மாநில அரசுப் பள்ளிக்கூடங்கள் எல்லாம் சரியான முறைகளில் நடாத்தப்படுவதில்லை. இங்குள்ள மாணவர்களின் நிலையே மோசமாகவுள்ளது. இது போன்ற காரணங்களால் 5ம் வகுப்புக்கு மேல் படிக்கும் நிலையில் உள்ள மாணவர்கள் அதிர்ஷ்டலாப சீட்டு கடைகளில், மதுபானக் கடைகளில், சினிமா கொட்டகைகளில், துப்புரவு செய்தல் வியாபாரம் செய்தல், கல் உடைத்தல், பீடி, ஊதுபத்தி, தீப்பெட்டி, துணிகளுக்கு சாயம் போடும் தொழிற்சாலைகளில், கோழிப் பண்ணைகளில், தெருப்போடுதல், பாலம் கட்டுதல், செங்கட்டித் தொழிற்சாலைகளில் மிகவும் கடினமான வேலைகளில் ஈடுபடுகின் றார்கள். பணப்புழக்கமும் கட்டுப்பாடற்ற வாழ்க்கை முறையும் மிகச் சிறுவயதிலேயே சமூக சீரழிவுப் பழக்க வழக்கங்களுக்கும் ஒரு பகுதி அடிமையாகிப் போயுள்ளார்கள்.

தமிழ் அகதி மாணவர்கள் அனைவருக்கும் கல்வி கிடைப்பது என்பது, நாம் அகதிகளாக வாழும் நாடுகளின் சமூக பொருளாதார அரசியலும் அவ் அரசுகளின் கல்விக் கொள்கைகளையும் பொறுத்த விடயமாகும். இந்தியா போன்ற பின் தங்கிய நாடுகளில் முழு அகதிக் குழந்தைகளுக்கும் கல்வியைக் கொடுப்பது என்பது அவ்வரசுகளால் இயலாத காரியமே. அதேவேளை அகதிமுகாம்களில் அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் கல்வி கற்கும் முழு மாணவர்களுக்கும் கூட உதவி செய்வதில்லை. மாறாக சுயமாக கல்வி பயிலும் மாணவர்களுக்கு தங்கள் நிறுவனங்ளின் வரவு செலவு திட்டத்திற்கு உட்பட்ட முறையிலேயே உதவுகின்றார்கள். அதேவேளை பாடசாலைக்கு செல்லவேண்டிய வயதிலும், படிப்பிலும் ஆர்வமற்ற குழந்தைகளுக்கு கல்வியின் தேவையை புரிய வைக்கும், உதவி செய்யும் எந்தக் கொள்கையும் இவர்களிடம் கிடையாது.

இந்தியாவில் தமிழ் நாட்டு அரசினதும் தொண்டு நிறுவனங்களினதும் கல்விக்கான உதவிகள் தற்காலிகமானவையே. ஆயினும் இந்தியாவில் தங்கி இருக்கம் வரை முகாம்களில் உள்ள படித்த மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள், முன்னாள் ஆசிரியர்கள், சனநாயக சக்திகள் அனைவரும் சம்பளத்திற்காக அல்லாமல், எமது தமிழ்ச் சமூகத்தின் எதிர்கால சந்ததிகள் 'கல்விக்கண்ணற்ற குருடர்களாக' மாறுவதை தடுக்க வேண்டும். இதற்காக பெற்றோர்களுக்கும் குழந்தைகளுக்கும் கல்வியின் அவசியத்தை புரிய வைத்து பாடசாலைகளுக்கு செல்ல ஊக்குவிக்க வேண்டும். தாங்களும் சுயமாக பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டும் அனைவருக்கும் சிறந்த கல்வி என்பது நாம் அனைவரும் நாடு திரும்புவதும் அனைவருக்கும் கட்டாய இலவசக் கல்வி வழங்கக் கோரி சிறீலங்கா அரசை நிர்ப்பந்திப்பதன் ஊடாகவே சாத்தியமாகும்.

- சதீஷ்-

அகதிகள் முகாம் -தமிழ்நாடு

**கோலம்**

தமிழகத்தில்
தமிழா உன் வாசலில்
வண்ணக்கோலங்கள்.....
ஈழத்தில் ஈழத்தமிழன் வாசலில்..
பிணக்கோலங்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## காலச்சுவடு 17வது இதழில் வெளியான நேர்காணலில் ஒரு பகுதி

## (நேர்காணல் - பருத்தித்துறை குலசிங்கம்)

**இந்த நீண்ட போர் தமிழர்களின் சமூக - கலாச்சார வாழ்வினை எவ்வாறு பாதித்துள்ளது ?**

அன்றாட வாழ்க்கை ஓர் நிச்சயம் அற்ற தன்மைக்கூடாகவே நடைபெறுகிறது. எதிலும் பற்றற்ற வெறுமையைக் காணமுடிகிறது. போரின் கொடூரங்கள் சமூக வாழ்வைச் சிதைத்துவிட்டன என்றுதான் கூற வேண்டும். நாம் அந்த வாழ்வுக்குப் பழக்கப்படுத்தப்பட்டு விட்டோம். மெல்ல மெல்ல போரின் கொடூரம் வலை போல் பின்னப்பட்டு எம்மை அதற்குள் சிக்க வைத்துவிட்டது. வெளியில் இருந்து ஒருவர் அதற்குள் வரும்போதுதான் எங்கள் அவல வாழ்வைப் புரிந்துகொள்ள முடியும். போர் என்பது வெறும் மரணங்களை மட்டும் தரவில்லை. எங்கள் வாழ்வின் சகல பரிமாணங்களையும் சிதைத்துவிட்டது. இளைஞர்கள் போருக்கும், வெளிநாட்டுக்கும் போய்விட்டார்கள். ஊரில் மிஞ்சி இருப்பவர்கள் சொற்ப இளைஞர்கள் தான். பெரும்பாலும் நாற்பது வயதுக்கு மேற்பட்டவர்களும் பதினைந்து வயதுக்குட் பட்டவர்களும் தான் ஊரில் இருக்கின்றார்கள். பலவீடுகளில் இருக்க ஆட்கள் இன்றி பாழடைந்து கிடக்கின்றன. பல கட்டிடங்கள் விமான குண்டு வீச்சுக்களைக் கண்டு சிதைந்துவிட்ட நிலையில் கிடக்கின்றன. குண்டு வீச்சுக்களால் சிதைவுறாத ஊர்களே இல்லை. எங்கள் ஊர் இந்திய இராணுவம் இருந்தபோது மூன்றுக்கு மேற்பட்ட முறை எரிக்கப்பட்டது. போர்க்கால வாழ்வில் மிகுந்த துன்பத்துக்கு முகம் கொடுக்க் வேண்டியிருந்தது. ஒவ்வொரு நாள் விடியும் போதும் இன்று எந்தப் பக்கத்தில் ஒடி உயிரைக் காப்பது என்ற கேள்விதான் முன்நிற்கும். தமிழ் மக்கள் இந்திய இராணுவம் வந்தபொழுது வாழ்வில் நிம்மதி வந்துவிட்டது என்று பெருமூச்சு விட்டார்கள். ஆனால் மூன்று மாதங்களில் அசோகச் சக்கரத்தின்மீது அமர்ந்திருக்கும் சிங்கங்கள் எங்கள்மீது பாய்ந்து பிய்த்துக் குதறிச் சீரழித்துவிட்டன. எங்கும் வயது சென்றவர்களே பெரும்பாலும் இருக்கின் றார்கள். வெளிநாட்டில் பிள்ளைகள், வெளிநாட்டில் கணவன்மார்கள் என்று ஒவ்வொரு வீட்டிலும் சிதைவுற்ற குடும்பங்களே வாழ்கின்றன. நான் எனது மகனை ஏழு வருடங்களின் பின் பார்ப்பதற்குத்தான் இங்கு வந்தேன். ஒரே மகன். ஏழு வருடங்களாக நாங்கள் பார்க்கவில்லை என்றால் எப்படி எங்கள் மனநிலை பாதிக்கப்பட்டிருக்கும் என்று யோசித்துப் பாருங்கள். இதே போன்றவர்கள் நிறைந்தது தான் யாழ்ப்பாணம். ஒவ்வொரு நாளும் அவர்களிடம் இருந்து கடிதங்களை ஆவலுடன் எதிர்பார்த்து இருப்பதும் கடிதம் வந்தால் அடுத்த கடிதம் வரை அந்தக் கடிதத்தை வைத்துக்கொண்டு திரும்பத் திரும்ப வாசிப்பதினாலேயே அந்தக் கடிதம் பிய்ந்து போகும். அந்தக் கடிதத்தில் பெரிதாக ஒன்றும் இருக்காது. ***"அப்பா, அம்மா அறிவது. சுகம். உங்கள் சுகம் எப்படி? நீங்கள் கவனமாக இருங்கள். யாழ்ப்பாணத்தில் விமான தாக்குதலாம். உங்களுக்கு ஒன்றும் இல்லையே? எப்போதுதான் அம்மாவின் கையால் சாப்பிடப் போகின்றேன்"*** வெறும் இந்த வரிகளைத்தான் நாங்கள் திரும்பத் திரும்ப வாசிக்கின்றோம். கம்பனையும் இளங்கோ வையும் படிப்பதையும்விட இவை எமது நெஞ்சுக்கு ஆறுதலைத் தருகின்றன. எமது பிரதேசத் துக்கான கடிதங்கள் கூட மூன்று நான்கு மாதங்களுக்கு ஒரு முறை தான் வரும். எங்கள் வாழ்வே கடிதங்களில் தான் பெரும்பகுதி தங்கியுள்ளன. வெளிநாட்டில் இருந்து வரும் பணம்தான் பெரும்பாலான குடும்பங்களை வாழ விக்கின்றது. பணம் வந்தால்கூட அதனை மாற்றுவதற்கு மிகுந்த சிரமப்பட வேண்டியுள்ளது. ஆயிரம் ரூபாய் தாளைச் சில்லறையாக மாற்றுவதற்கு ஐம்பது ரூபாய்க்கு மேல் கொமிஷன் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் கூட இருந்தது. தபால் போட முத்திரைகள் போதியளவு கிடைக்காது. அதைக் கூடுதல் விலை கொடுத்துத் தான் வாங்க வேண்டும்.

இப்பொழுது எல்லாம் எங்கள் ஊரில் மாப்பிள்ளை இல்லாமல், மாப்பிள்ளையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெண்ணும் இல்லாமல்கூட, திருமணங்கள் நடக்கின்றன. மாப்பிள்ளை வெளிநாட்டில் இருப்பார், அவருக்கு நிச்சயம் செய்யப்பட்ட பெண் இங்கு இருப்பாள். வெளிநாட்டுக்குப் பெண்ணை அனுப்பிவைக்கும் முன் பெண் மாப்பிள்ளை வீட்டுக்கு அழைத்துவரப் படுவார். சொந்தக்காரர்கள், நண்பர்கள் எல்லாம் வந்து விருந்துண்டு கொண்டாடு வார்கள். மணப்பெண்ணின கையில் பரிசுப்பொருட்கள், பணம் கொடுக்கப்படும். இன்னொரு விதமானது கனடாவில் ரொறண்டோவில் திருமணம் நடைபெறும் நாளில் ஊரில் உள்ள மணமகன் வீட்டிலோ, மணமகள் வீட்டிலோ கொண்டாட்டம் விருந்து எல்லாம் நடைபெறும். பின் ஒரு நாள் இந்தத் திருமணத்தின் வீடியோ கேசட் வந்தபின் இரவில் வீடியோ படம் போட்டு விருந்து நடக்கும். திருமணங்கள் மாத்திரம் மட்டும் அல்ல; பிள்ளையைத் தொட்டிலில் போடும் சடங்கு, பிறந்தநாள் நிகழ்வுகள் யாவும் வீடியோ கேசட்டுக்களாக இங்கு வந்து பார்க்கப்படும். கொழும்பு சென்று தொலைபேசியில் கதைக்கும் தன் பெற்றோர்களுக்குத் தன் குழந்தையைக் கிள்ளிவிட்டு அது அழும் குரல் தொலைபேசியில் கேட்க வைப்பதும், பேரப்பிள்ளையின் குரலைத் தொலைபேசிக்குள்ளாகக் கேட்ட சந்தோஷத்தில் அவர்கள் இருப்பதும் எங்கள் இன்றைய வாழ்வின் ஒரு பரிமாணம் தான்.



தொடர்ந்து உள்நாட்டுப் போரினால் ஆப்கான் தலைநகர் காபூலில் பொருளாதார நிலை மோசமடைந்து வருகிறது எதையாவது விற்று உணவுப் பொருள்களை வாங்க வேண்டிய சூழ்நிலை இங்கு வண்டியில் செல்லும் வீட்டு உபயோகப் பொருள்களும் பசியைப் போக்கத்தான்

**போர் எவ்வாறு குழந்தைகளைப் பாதித்துள்ளது ?**

பல விதங்களிலும் போர் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது, மரணங்கள் எமக்குப் பெரிய அதிர்வினை இப்பொழுது தருவதில்லை. முன்பெல்லாம் எங்கள் வீதியில் ஒரு மரண ஊர்வலம் போனால் சிறுவர்களான எங்களை வெளியில் போக விடமாட்டார்கள். எங்காவது ஓர் இடத்தில் விபத்து ஏற்பட்டு மரணம் நேர்ந்தால் அந்தப் பாதையை நாம் பல நாட்களுக்குத் தவிர்த்துக் கொள்வோம். ஆனால் இன்று எல்லாம் நேர்மாறு. சிலவேளைகளில் சிறுவர்கள் விளையாட்டுப் பொருள் என எடுத்து விளையாடும் டப்பாக்கள் கூட வெடித்து அவர்கள் காயப்படவோ மரணமுறவோ வைக்கின்றன. வெடிக்காத தோட்டாக்களை எடுத்து விளையாடுதல், மருந்து தீர்ந்துபோன வெற்றுத் தோட்டாக்களில் தீக்குச்சி மருந்துகளை நிரப்பி அதை வெடிக்க வைக்கும் பொழுது மரணமுறுவது, கைகால்களை இழப்பது என்று குழந்தைகள் பாதிக்கப்படுகின்றனர். பத்திரிகைகளில் இப்படி செய்யாதீர்கள் என்று அறிக்கைகள் வரும் அளவிற்கு நிகழ்கின்றன. நாம் வளர்க்கும் மிருகங்கள் பறவைகள் கூடப் போர் விமானங்கள், ஹெலிகேப்டர்கள், செல்லின் சத்தத்தைக் கேட்டவுடனேயே பாதுகாப்பை தேடி ஓடுவதைக் காண முடிகின்றது. நாம் பங்கருக்கு செல்வதற்கு முதல் நாங்கள் வளர்க்கும் நாய், பூனை முதலியவை பங்கருக்குள் சென்று ஒளிந்து கொள்கின்றன ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## தமிழீழ அகதிகள் புலம் பெயர்ந்துள்ள நாடுகளும், எண்ணிக்கையும்

| | | | |
|---|---|---|---|
| * இந்தியா - முகாம்களில் | 80.185 | * அமெரிக்கா | 15.000 |
| - முகாமுக்கு வெளியில் | 100.000 | * ஒஸ்திரேலியா | 8.000 |
| -96 ஆடிக்கு பின் வந்தவர்கள் | 8.750 | * பின்லாந்து | .200 |
| - நிரந்தரமாக வாழ தயாராகிவிட்டவர்கள் | 1.500 | * ஜெர்மனி | 60.000 |
| * பிரான்சு | 40.000 | * இலண்டன் | 35.000 |
| * நோர்வே-சுவிடன் | 6.000 | * நெதர்லாந்து | 15.000 |
| * பெல்ஜியம் | 1.000 | * நியூசிலாந்து | 1.000 |
| * டென்மார்க் | 8.000 | * சுவிச்ர்லாந்து | 36.000 |
| | | * கனடா | 125.000 |

*கீழ்க்காணும் நாடுகளிலுள்ள தமிழீழ அகதிகளின் எண்ணிக்கை திட்டவட்டமாக உறுதி செய்யப்படவில்லை. அங்குள்ளவர்கள் தந்த அண்ணளவான மதிப்பீடாகும்.*

| | | | |
|---|---|---|---|
| * தாய்லாந்து | 5.000 | * மெக்சிக்கோ | .300 |
| * கம்போடியா | .500 | * சிலி | .200 |
| * வியட்னாம் | 1.000 | * பெரு | .300 |
| * இந்தோனிசியா | 3.000 | * ருமேனியா | .750 |
| * போர்ச்சுவானா | 2.000 | * பல்கேரியா | .800 |
| * கென்யா | 1.200 | * ரசியா, உக்ரேன் | 8.000 |

**வாசகர்களே ! அகதியின் குரல் மீதான விமர்சனங்கள் ஆலோசனைகள், அகதிகள் தொடர்பான ஆக்கங்கள், வெளியீடுகள், சகோதர நாட்டு அகதிகள் குறித்த செய்திகள் வெளியீடுகளை அனுப்பி உதவ வேண்டிய புதிய முகவரி:**

வெளியிடுபவர்கள்:

ஈழ அகதிகள் உரிமைக்கழகம் - கனடா
(Eelam Refugee Rights Organisation - Canada)

தமிழ் அகதிகள் இலக்கிய வட்டம் - பிரான்சு
(Tamil Refugee Literature Centre - Refugee)

சுமைகள்- நோர்வே
(Sumaihal - Norway)

MR. NAZIR ATAF
POST BOOKS -10
5125 BOVAGEN
NORWAY

*விலை:*
அய்ரோப்பா, அமெரிக்கா - 2 $
இலங்கை, இந்தியா - ரூபா. 15



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்